# வினாக்கள்...

## பாகம்-1

# விதைகள்...

இந்த பரலோக
இரகசியத்தை கண்டு,
என் இருதயம்
மறுரூபமடைந்தபோது...

என் படுக்கையின் மீது
இறக்கைகள் முளைத்து விட்ட
அனுபவம் எனக்கு...

வைகறை காற்று
செய்தி அனுப்பியிருந்தது...

**இயேசு வந்து கொண்டிருக்கிறார்**
**என்று!**

## என்னுரை...

இந்தப் புத்தகத்தின் ஆசிரியரைப் பற்றிய விவரம் ஒரு விதையைப் போன்றது. அது பூமியினுள் புதையுண்டு போன ஒன்று. அது பூமிக்கு வெளியே இருந்த காலத்தில் தனித்திருந்தது, யாருக்கும் பிரயோஜனமின்றியிருந்தது. ஆனால் அது புதையுண்ட போது; செத்தது, பலன் தருவதற்கேதுவாக துளிர் விட்டு வளர ஆரம்பித்தது ... தேவன் தன்னுடைய ஒரு தரிசனக் கருவை விதையாக விதைத்த போது, எழுது கோலையும் தந்தார்.

பிதாவாகிய தேவன் தன் சிருஷ்டிப்பின் ஆதியாக இயேசுவை கொண்டிருந்தார். (நீதி.8:22). அவர் தன் குமாரனையே தன் சகல கிரியைகளின் விதையாக உபயோகித்திருப்பதை விளங்கிக் கொள்ள பரிசுத்தாவியானவர் வெளிச்சம் தந்தார். பூமியின் முடிவு பரியந்தம் மாறாத வேத பிரமாணங்களில் இந்த விதையும் ஒன்று (ஆதி.8:22)

இந்த பூமி முழுவதும் உலகின் முதல் மனிதனான ஆதாம் முதல், இக்கால கடைசி **(Present continuous)** மனிதன் வரை விதைத்த விதைகளின் விளைச்சலால் நிறைந்திருக்கின்றன என்பதே நிதரிசனம். இதை ஒரு சிலர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், சத்தியம் பொய்யாகி விடாதே. அதனால் இக்கால உலகத்தில் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கும் முதல் வரிசை பிரச்சனைகளுக்கும் இந்த விதையில் பதில் இருக்க கண்டிப்பாக சாத்தியம் உண்டு. அப்படிப் பார்க்கும் போது ஒரு முக்கிய பிரச்சனையை ஆவியானவர் சுட்டிக் காண்பித்தார்.

யாரும் கவனிப்பாரற்றுக் கிடந்த இந்த பிரச்சனையின் மேல் படிந்துக் கிடந்த தூசியை தட்டி விட்டு அதைக் கையில் எடுத்த போது...

அது, "தேவ ஜனங்களின் பொருளாதாரப் பிரச்சனை" என்றிருந்தது.

ஆண்டவருடைய பிள்ளைகள் பொருளாதாரப் பிரச்சனையால் கஷ்டப்படுவதை வாழ்க்கையினூடே பார்த்துக் கொண்டே வந்திருந்தாலும், அதைப் பற்றிய ஆழமான யோசனை எதுவும் என் மனதில் ஏற்பட்டதில்லை. ஏனென்றால், அக்காலங்களில் எனக்கு பண நெருக்கடி ஏற்பட்டதில்லை. ஏழைகளைப் பார்த்து மனதில் குறைவாக மதிப்பிடுவதில்லை, என்னைப் பற்றி பெருமை பாராட்டுவதுமில்லை. என்றபோதிலும் தரிசனம் இல்லாத வெற்று இருதயத்தில் அவர்களைப் பற்றிய அக்கறை எதுவும் இல்லாமல் இருந்தது.

ஆனால் தேவனுடைய ஞானம் எத்தனையானது என்று பாருங்கள்! இந்த தரிசன விதையை நல்ல நிலத்தில் போட வேண்டும் என்பதற்காக வறுமை என்னை சூழ்ந்து வரும்படி செய்தார். தரிசு நிலத்தை உழுது செம்மையானதாக்கினார். வறுமையை தீர்க்க ஆண்டவரால் கட்டாயம் முடியும் என்ற நம்பிக்கையிருந்தது. ஆனால் சரியான வழி தெரியாமல் இருந்தது.

காலப் போக்கில் பரிசுத்தாவியானவரால் காட்டப்பட்ட பாதை என் முன்னே விரிய ஆரம்பித்தது. எதை விதைக்கிறோமோ, அதையே அறுவடை செய்வோம். பணத்தை விதைத்தால் அதை அறுவடை செய்யலாம். நம் பணப் பிரச்சனை தீர இந்த ஒரே ஒரு வழிதான் வேத வசன வாக்குதத்தங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. நம் பணத்தை எப்படி, எங்கே, எப்போது, எவ்வளவு, விதைக்கலாம் என்பதற்கான ஒரு "சிறு துளி" ஆலோசனைதான் இது. பல துளிகள்தான் பெரு வெள்ளமாக முடியும். உலகளாவிய தேவ சபையில் இதே தரிசனம் பெற்றவர்கள் அதை உங்களுக்குத் தருவார்கள். எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை மட்டும் நான் உங்களுக்குத் தருகிறேன். அது என் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தக்கவாறு இருக்கிறது. தற்சமயம் என் பொருளாதார நிலையும் அப்படியே... என் உள்ளான மனிதனின் வளர்ச்சிக்குத் தக்கவாறு இருக்கிறது. (3 யோவான். 1:2)

உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி:
சகோதரி. லதா டேவிட்
நித்தியர் இயேசு ஊழியங்கள்
5A/233, கால்டுவெல் காலனி, 2-ம் தெரு, (கிழக்கு)
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-2377889
அலைபேசி: +91-09442466250 & +91-9003456506
Email : sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

Our Address:
**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**5-A/233, Caldwell Colony, Second Street (East),**
**TUTICORIN-628 008**

**Phone : +91-461-2377889**
**Mobile : +91-0-94424 66250 & +91-0-9003456506**
Email : **sovereignjesus@gmail.com**
**Web : www.sovereignjesus.com**

“விதை” என்பது பெருக்கத்திற்கு அடையாளம். “பெருக்கம்” என்பது ஒரு ஆசீர்வாதத்திற்கு அடையாளம். (ஆதி.1:12)

இந்த விதையை உருவாக்கிய பிதாவாகிய தேவனில் இருந்து ஆரம்பித்தால் எல்லாம் சரியாக புரியவரும். அவர் ஒருவரே தேவன். யெகோவா என்பது அவருடைய நாமம், அவர் அனுப்பிய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே ஆண்டவர். இரட்சிப்படைய அவரை தவிர வேறு வழி வேத கட்டளைகளில் இல்லை. அந்த இயேசு அனுப்பிய பரிசுத்தாவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை மேயும் படி செய்து, முடிவில் பரலோகம் கொண்டு செல்பவர். அவர் வெளிப்படுத்திய அந்த சத்தியத்தின் ஒரு இரகசியம்தான் “விதை”

பரலோகத்தில் ஐசுவரியம் உண்டு, தரித்திரம் கிடையாது. தேவன் இயேசுவின் மூலமாக இந்த உலகத்தையும், அதிலுள்ள காரியங்களையும் உருவாக்கும் போது பரலோக காரியங்களைதான் அதற்காக உபயோகிக்கிறார். அப்படியிருக்க அவருடைய சிருஷ்டிப்பில் தரித்திரம் நுழைந்திருக்க சந்தர்ப்பமே இல்லை. ஆனால் இன்று உலகமெங்கும் தலைவிரிகோலமாக ஆடிக்கொண்டிருக்கும் பிரச்சனைகளில் தரித்திரம் முன்னணியத்தில் நிற்பதற்கு காரணம்தான் என்ன? ஐசுவரியம் தேவனுடைய தன்மைகளில் **(Nature of God)** ஒன்று.

இதில் முக்கியமாக தேவன் “தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியும் மனிதனை உருவாக்கினார். அதனால் அந்த “ஐசுவரியம்” நமக்குள்ளும் கலந்திருக்கும் தன்மைகளில் ஒன்று. தரித்திரம் தேவனுடைய சித்தமில்லை என்பதினால் அவருடைய சிருஷ்டிப்பில் அது எவ்வளவும் இல்லை.

ஆனால் மனிதன் தரித்திரமடைவதற்கு என்ன காரணம்? இது ஏன் நடந்தது? எங்கே தவறு நடந்தது? மனிதன் தரித்திரத்தை உள்ளே நுழைய விட்டது எப்போது? அதிலிருந்து எப்படி வெளியே வரலாம்? வாக்குத்தத்தத்தின்படி செல்வத்தை, ஆசீர்வாதங்களை எப்படி சுதந்தரிக்கலாம்? அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? எதை விதைக்க வேண்டும்?

பரிசுத்தாவியானவர் இந்த விதையை என்னில் விதைத்து; இந்த சத்தியத்திற்குள்ளாக என்னை நடத்த ஆரம்பித்தார். பரிசுத்தாவியானவரால் அடிக்கடி நீர் பாய்ச்சப்பட்டு, கவனிப்புடன் “விதை” வளர்ந்தது... மேற்கண்ட கேள்விகளுக்கு ஒவ்வொன்றாக பதில் விளைய ஆரம்பித்தது.

தேவன் உலகத்தை தன் ஐசுவரியத்தால் ஆசீர்வாதமாக உருவாக்கி முதல் மனிதனாகிய ஆதாமுக்கு கொடுத்தார். பெருமையினால் பரலோகத்தில் இருந்து தள்ளப்பட்டு சாத்தானாக மாறிய தேவதூதனாகிய லூசிபர் தரித்திரனானான். அவன் தன் தந்திரத்தினால் ஆதாமை வஞ்சித்து அவன் கையிலிருந்த ஐசுவரிய உலகத்தை தட்டிப் பறித்தான்.

(ஆதி.3-ம் அதிகாரம் முழுவதுமாக வாசித்தால் புரியும்.)

தன் ஆளுகைக்குள்ளாக வந்த ஐசுவரியத்தை தன்னை பின்பற்றினவர்களுக்கு தாராளமாக கொடுத்து வருகிறான். தேவனை அறியாத புறஜாதியாராகிய உலக மக்கள் ஐசுவரியத்தின் பெரும் பகுதியை தங்கள் கையில் வைத்துக் கொண்டிருப்பதின் இரகசியம் இதுதான். (மத்.4:8,9) அதே நேரத்தில் தேவனை அறிந்த தேவ சபைக்குட்பட்டவர்கள் வாக்குத்தத்தங்களை பற்றிய சரியான ஞானமில்லாமல் தரித்திரத்தில் வாடிக்கொண்டிருக்கும் இரகசியமும் அதுவேதான்! (ஏசா 5:13).

இந்த வேதனையை கூட்டுகிற ஐசுவரியத்தை சாத்தான் மனிதர்களுக்கு கொடுத்து அதை அவர்கள் தவறாக உபயோகிக்கும்படி செய்து (களியாட்டுகள், விகாரங்கள், சுகபோக வாழ்க்கை, ஆடம்பரம்) பல வேதனைகளால் உருவ குத்தப்பட வைத்து, அவர்களின் வாழ்க்கையை அழித்து பாதாளத்துக்கு இழுத்துக் கொண்டு போகிறான்.

இதைப் பார்த்த கிறிஸ்தவ உலகம் “பணம்” தவறானது என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டது. அதாவது, சாத்தான் போட வைத்து விட்டான். அப்படி செய்தால்தானே தேவ பிள்ளைகளை தரித்திரர்களாக்க முடியும்? சுமார் 2000த்திற்கும் மேற்பட்ட ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள் வேதத்தில் இருந்தும், ஆண்டவருடைய பிள்ளைகள் அதை சவதரித்துக் கொள்ளாமல் தரித்திரத்திலேயே வாழ்வதற்கு காரணம் சாத்தானின் இருட்டடிப்புதான்.

ஆண்டவர் தன்னுடைய பிள்ளைகள் கிறிஸ்துவில் வளர வேண்டும் என்பதற்காக, அவர்களை பயிற்றுவிக்க சில வேளைகளில் தரித்திரத்தை அனுமதித்தாலும் அது அவருடைய சித்தமில்லை என்பது தான் உண்மை. “அனுமதி” என்பது வேறு, “சித்தம்” என்பது வேறு. ஆனால் வேதனையை கூட்டுகிற உலக ஐசுவரியங்களை உலகத்தார் பெறுவது போல பெறுவது தேவ சித்தமில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் தேவனுக்கு சித்தமான ஐசுவரியம் எது? அது... அதற்கு எதிரிடையானது, வேதனைகளை கூட்டாதது. அது அவருடைய வாக்குத்தத்தங்களின் வழியாக நுழைந்து வருவது (எசே.20:16). அப்படியானால் பெற்றுக் கொள்ள என்னதான் செய்வது? வாக்குத்தத்தங்களுடன் இணைந்திருக்கும் கட்டளைகளை முடிச்சவிழ்க்க வேண்டும், அப்போது வாக்குத்தத்தம் விடுதலை பெற்று நம்மிடம் வரும். அதுவரை வாக்குத்தத்த வாசலோரம் காத்திருக்க வேண்டும். (லூக்கா. 24:49)

விதை என்பது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். உதாரணமாக, கோதுமை மணி ஒன்றை விதைத்தால் நூற்றுக்கணக்கில் கோதுமை விளையும். (யோ.12:24) ஆவியின் கனிகளில் (அன்பு) ஒன்றை எடுத்து விதைத்தால், அந்த அன்பு விளைந்து பயிராகும். விசுவாசம், பொறுமை, சாந்தம், இச்சையடக்கம்... என்று எதை விதைத்தாலும் அது வளரும், விளைந்து பயிராகும். வசனத்தை விதைத்தால் சுவிசேஷம் விளையும். ஜனங்கள் இரட்சிக்கப் படுவார்கள். (சங்.68:11) நம்மையே கோதுமை மணி போல விதைத்தால், அநேகமாயிரம் சுவிசேஷகர்கள் முளைத்தெழும்புவார்கள்! தவறாக, விஷ விதை எதையாவது விதைத்து விட்டோமானாலும் அதுவும் முளைத்து தொலைத்து விடும். உலகத்தின் இன்றைய மோசமான நிலைமைக்கு காரணமே இறந்த கால மனிதர்கள் விதைத்துப் போன விஷ விதைகள்தான் காரணம்.

உதாரணத்திற்கு கோபம், எரிச்சல், விரோதம், பகை, பழிவாங்கும் தன்மை, கசப்பு, மன்னிக்க முடியாத தன்மை, மாய்மாலம், களியாட்டுகள்... அடுக்கிக் கொண்டே போகலாம். (மத்.13:25-30) சரி, அது போகட்டும், பணத்தை விதைத்தால் பணம் விளையும்! இப்போது புரிய ஆரம்பித்திருக்கும்.

கேட்டுக்குப் போகிற விரிவான வாசலைத் தெரிந்துக் கொண்டிருக்கும் உலக மக்கள் தங்கள் உலக ஆசீர்வாதத்தை சாத்தானுடைய ராஜ்ஜியத்திற்கென்று விதைக்கிறார்கள். அவர்களின் விதைப்பின் பலனை சாத்தான் வேதனையை கூட்டுகிற ஐசுவரியமாக திரும்பத் தருகிறான். அந்த விளைவின் மோசமான பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இராஜ்ஜியத்தின் புத்திரரோ விதைக்க மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். விழித்தெழும்பும் போது ஆயுதமணிந்து வரும் தரித்திரம் தங்களுடைய கார், பங்களா, சொத்துக்களை வாரிக் கொண்டு போய்விட்டதை அறிந்து புலம்புகிறார்கள், என்ன பிரயோஜனம்?

வாக்குத்தங்கள் மூலம் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள தேவ பிள்ளைகளுக்கு வழிகள் இருந்தும், அதை தெரிந்துக் கொள்ளாமல் உலக மக்களை போல தரித்திரத்திலேயே வாழ்கிறார்கள். ஜீவனுக்கு போகிற வாசல் குறுகலானது, அதை கண்டு பிடிப்பவர்கள் சிலர்தான். அப்படியே கண்டுபிடித்தும் அதன் வழியே நடப்பவர்கள் இன்னும் மிகச் சிலர்தான். அதனால்தான் விதை விதைக்காமல், அறுவடையும் இல்லாமல் தரித்திரத்திலேயே வாழ்கிறார்கள்.

அகில உலகெங்கிலும் நற்செய்தி அறிவிக்கும் பணி முடுக்கி விடப்பட்டிருந்தும், போதிய ஆத்தும அறுவடையில்லாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். பணப் பற்றாக்குறை காரணமாக பல நற்செய்தி ஊழியங்கள் முடங்கிவிட்டன. ஆனால் எல்லா பணமும் அதற்கு உபயோகப்படாது. இது என்ன புதிய கதையாக இருக்கு, பணத்துல நல்ல பணம், கெட்ட பணம் என்றா இருக்கிறது? என்று தோன்றலாம். நிஜம்தான். நல்ல பணம் தேவ பிள்ளைகளிடம் தேவ வாக்குத்தத்தங்களின் மூலமாக வந்தது. கெட்ட பணம்?

உலக மக்களின் கைகளிலும், பெயர் கிறிஸ்தவ மக்களின் கைகளிலும் ஏராளமாக புழங்கிக் கொண்டிருக்கும் வேதனையை அதிரிக்கும் பணம்தான் அது. சாத்தானின் இராஜ்யத்திற்காக விதையாக இறைக்கப்பட்டு, வீணாய் போய்க் கொண்டிருக்கிறது. அது தேவ இராஜ்ஜிய கட்டுமானப் பணிக்குப் பயன்படாது. இது என்னடா வம்பாப் போச்சி, அப்படியானால் “மீன் விற்ற காசு நாறவா செய்யும்?” என்ற பழமொழி என்னாவது என்றுதானே கேட்கிறீர்கள்? அதை தூக்கி குப்பையில் போடுங்கள். மீன் விற்ற காசு உண்மையில் நாறத்தான் செய்யும்! (உபா. 23:18)

பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்வது எப்படி? என்ற பெரிய கேள்விக்கு பரிசுத்தாவியானவருடன் வேத வசன ஆழங்களுக்குள் நடந்து சென்றால் தான் புரியும்.

## அடுத்ததாக...

ஆதியாகமம் 1:11ல் தேவன் விதையை பெருக்கத்திற்கு (ஆசீர்வாதத்திற்கு) ஏதுகரமாகவே உருவாக்குவதைப் பார்க்கிறோம். விதையை விதைத்தால்தான் அது முளைவிட்டு முளைக்கும் என்கிற இயற்கை விதி எல்லோருக்கும் தெரிந்திருப்பது போலவே, விதைக்காவிட்டால் முளைக்காது, அறுவடையும் இருக்காது என்ற விதியும் எல்லோருக்கும் தெரியவே தெரியும்தான். இயற்கை விதிகளை நியமித்த நம் தேவனாகிய கர்த்தர், பூமி முடியும் நாள் வரையில் இந்த விதி மாறப் போவதில்லை என்பதை ஆதி 8:22ல் அடித்து சொல்லியும் விட்டார்!

இரகசியம் தெரிந்த தேவனுடைய பிள்ளைகள் கூட, நெல் விதைக்கும் விஷயத்தில் மட்டும்தான் இந்த நியதியை பின்பற்றுகிறார்கள். தேவனுக்காக தங்களை, அன்பை, பணத்தை, வேறு எதையும் விதைக்க மனமற்றவர்களாக இருக்கிறார்கள்.

தேவன் விதையை கொடுத்தால்தானே, அதாவது பணத்தைக் கொடுத்தால்தானே காணிக்கை கொடுக்க முடியும்? என்று கேட்பவர்களுக்கு; தேவன் விதையை தரவில்லை என்று யார் சொன்னது? ஆதி 1:11ல் தங்களில் தங்கள் விதைகளையுடைய கனிகளை முளைப்பிக்க வைக்கிறார் என்று பார்க்கிறோம்.

ஒரு மாதளம் பழத்தை உடைத்து உள்ளே பார்த்தால் உள்ளே ஏராளமான விதைகள் காணப்படும். நாம் சாப்பிடுவதற்காக அவற்றை எடுத்தாலும், விதைக்க வேண்டுமானால் அதற்கும் அதிலிருந்துதான் சிலவற்றை எடுத்தாக வேண்டும். தேவன், விதைக்காக தனியாக சில விதைகளை நம் கையில் கொண்டு தருவதில்லை.

தேவன் நம் கையில் ஒரு பத்து ரூபாயை கொடுத்தால் கூட அதில் ஒரு ரூபாய் விதைதான்! அதை நாம் தான் விதைக்காக எடுத்து வைக்க வேண்டும். தேவன் அவராகவே எடுத்துக் கொள்ள மாட்டார். தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில், நெல்லை மாவட்ட குக்கிராமங்களில் பெரும்பான்மையான மக்கள் விவசாயிகள்தான். நெல் அறுவடை முடிந்த பிறகு அவர்கள் எல்லா நெல்லையும் அப்படியே Rice Mill-ல் கொடுத்து அரிசியாக்கி சாப்பாட்டுக்காக வைத்துக் கொள்வதில்லை. அதில் 5%, 10% அல்லது அதற்கு அதிகமாகவோ எடுத்து பத்திரமாக “குதிர்” என்கிற மண்பாண்டங்களில் போட்டு பத்திரப்படுத்துவார்கள். அடுத்த விதைப்பின் காலம் வரும் போது அதை எடுத்து விதைப்பார்கள். இவ்விதமாக செய்வதினால்

அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய சூழ்நிலை வராதபடி தங்களை காப்பாற்றிக் கொள்கிறார்கள்.

அதற்கு மாறாக அவர்கள் அந்த குதிருக்குள் இருக்கும் விதை நெல்லையும் எடுத்து சாப்பாட்டுக்காக வைத்துக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். என்ன நடக்கும்? நிலைமை மிக விபரீதமாகி விடும். விதைப்பின் காலத்தில் விதை இல்லாததினால் நிலத்தை தரிசாக போட்டு விட வேண்டியதாயிருக்கும். அப்படிப்பட்ட நிலத்தில் களைகளும், முட்செடிகளும் முளைத்து நிலத்தை மண்டிக் கொள்ளும். பரிதாபகரமான அந்த ஏழை விவசாயி தன் வயிற்றுப் பாட்டிற்காக அடுத்தவர் வயற்காட்டில் கூலிக்கு வேலை செய்து, அரைவயிறு, கால்வயிற்று சாப்பாடுமாக காலத்தை ஓட்ட வேண்டியதுதான்.

பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய உலகத்திலும் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது. ஆவிக்குரிய உலகம் மாமிச கண்களுக்கு தெரியாதாகையால் யாரும் இதை உணர்வதில்லை.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது, ஏழையாக இருப்பதனால் யாரும் “எனக்கு காணிக்கை கொடுக்க வசதியில்லை” என்று சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. ஏழை விவசாயி என்பதனால், அவனுடைய வயற்காட்டில் மட்டும், விதை விதைக்காமல் பயிரை தேவன் முளைக்க வைப்பதில்லை. எல்லோருக்கும் ஒரே விதிதான். தகுதிக்கேற்ப, வருமானத்திற்கேற்ப விதைக்க வேண்டியதுதான்.

இந்த நிதரிசன அனுபவ உண்மைக்குள் மாட்டியிருந்த எனக்கு பரிசுத்தாவியானவர் வெளிச்சம் தர ஆரம்பித்தார். அந்த வெளிச்சத்தில் வாக்குத்தத்த கதவுகள் கண்களுக்கு தெரிந்தன. அதனுள் நுழைந்த போது...

## ஆசீர்வாத வழிகள்:

விதைக்காமலேயே அறுவடை செய்வதற்கான குறுக்கு வழிகள் எதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லை. நம் தேவன் **Magician** அல்ல, இயற்கை நியதிகளின் வழியாகவே செயல்படுகிறவர். அதனால்தான் தேவன் உலகத்தை உருவாக்கிய ஆரம்பக் கட்டத்திலேயே அதிக ஞானமுள்ளவராக விதையை உருவாக்கி விடுகிறார். (ஆதி. 1:29). அன்று முதல் இன்று வரை “விதை” இயற்கை விதிகளில் ஒன்றாக ஊடுருவி வந்துக் கொண்டேயிருக்கிறது. இனிமேலும் வரும்.

உலகம் உருவாகிய ஆரம்ப நாட்களில் ஆதாம் எதை விதைத்தானோ, மற்றும் நம் முற்பிதாக்கள் எவற்றையெல்லாம் தங்கள் அறியாமையினாலே விதைத்தார்களோ அதைத்தான், பிற்கால சந்ததியினராகிய நாம் அறுத்துக் கொண்டே வந்து கொண்டிருக்கிறோம். உலகம் தோன்றி சுமார் 6000 வருஷங்களாக இதுதான் நடந்துக் கொண்டிருக்கிறது. (ஆதி.8:22)

“பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது” என்ற வசனத்தை சாத்தான், பணம்தான் தீமைக்கு வேர் என்று உருமாற்றம் செய்து விசுவாச உலகத்தில் விதைத்து விட்டது தான் தீங்கிலும் மேலான தீங்காகி விட்டது. இதனால் விசுவாசிகள் அனுபவிக்கும் துயரங்கள் கொஞ்சமா? நஞ்சமா? ஆனால் சாத்தான் இதில் தொடர்ந்து ஜெயித்துக் கொண்டேயிருப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. இதைக் குறித்த விழிப்புணர்வு மிகக் கொஞ்சமாக இருப்பது தான் இதற்கு முக்கிய காரணம்.

ஆதி 2:5ல் விதை தன் வேலையை செய்வதற்கு தேவன் மனிதனைதான் (நம்மை) ஏற்படுத்துகிறார். மனிதனால் பண்படுத்தப்பட்ட நல்ல நிலத்தில் விதை ஊன்றப்படும் போது அது 100 மடங்கு பலனைத் தருகிறதாயிருக்கிறது. நல்ல நிலத்தை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற கேள்விதான் விசுவாசிகள் பலர் விதைக்காமல் தயக்கம் காட்டுவதற்கு காரணமாக இருந்து வருகிறது. சபை போதகர்கள், சுவிசேஷகர்கள் பலர் தசமபாகம், காணிக்கைகளை சரியானபடி தேவ இராஜ்ஜியத்திற்காக பயன்படுத்தாமல் தவறாக பயன்படுத்துவது நடந்து கொண்டுதான் இருக்கிறது,

இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால், அதனால் நம் விதை வீணாகிவிடாது என்பது மட்டும் நிச்சயம். நம் தேவன் நமக்கு உண்மையுள்ளவராயிருந்து, நம் விதைகளை நல்ல நிலத்தில் விழ வைத்து, விளையச் செய்ய வல்லவராயிருக்கிறார். நம் காணிக்கைகள் வீணாவதை தேவன் அனுமதிக்காமல், நாம் அவர் மேல் பாரத்தை போட்டுவிட்டு கொடுக்கும்போது, பரிசுத்தாவியானவர் மூலமாக சரியான பாதையில் நடத்துவார், விசுவாசிப்போம். விசுவாசம்தான் கிறிஸ்தவத்தின் ஆணி வேர்.

## அடுத்ததாக...

பயிர் வளர மழை தேவை, அதாவது பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் தேவை. பரிசுத்தாவியானவரின் உதவியில்லாமல் நாம் நல்லதொரு ஆவிக்குரிய விவசாயியாக முடியாது என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். (ஏசா.27:3) இயேசு கிறிஸ்துவுக்கு நாம் "உடன் சுதந்திரர்" என்று வேதம் சொல்லுகிறது. அவருடன் **Partnership** வைத்துக் கொள்ளும் போது நம் நிலம் தரிசாகிப் போக வாய்ப்பில்லை.

### *ஏதேனிலே என்ன நடந்தது ? (மர்ம முடிச்சை அவிழ்ப்போம்)*

பிதாவாகிய தேவனுடைய சிங்காசனத்திற்கு மேலாக தன் ஆளுகையை கொண்டு வர முயற்சித்து, (ஏசா.14:13) தோல்வியடைந்த சாத்தான் தன் மேன்மையை இழந்தது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பலருக்கு தெரியாத விஷயம் என்னவென்றால், நிறைவேறாத தன் ஆசையை மனுக்குலத்தின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள ஒரு **Master Plan** போடுகிறான். தேவனுடைய தன்மைகளை மனிதனுக்குள் வரவழைத்துவிட்டால் அவனுக்குள் சென்று ஆளுகை செய்வதன் மூலமாக தேவத்துவத்தைப் பெறலாம் என்பதே அது. "நன்மை தீமை அறியத்தக்க கனி"யை சாப்பிட வைத்து தன் முயற்சியில் ஓரளவுக்கு வெற்றியும் பெறுகிறான். (ஆதி 3:22)

தன்னை உண்டாக்கின தேவனை விட தான் பெரியவனாக ஒருக்காலும் முடியாது என்பதை உணராத அறிவில்லாத, முட்டாளான சாத்தானை, தன் தொடர் முயற்சிகளை எடுக்க விடாதபடி கர்த்தர் இடைபடுகிறார். அதனால் பூமி சபிக்கப்பட்டு விதைகள் முட்களையும், புதர்களையும் முளைப்பித்தது. (ஆதி 3:18,22) வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை தடுத்தும் நிறுத்தியது. நாம் செய்ய வேண்டியது என்னவென்பதைப் பார்ப்போம்.

முதலாவதாக, சபிக்கப்பட்ட நிலத்தில் விதைகளை முளைக்க விடாதபடி செயல்படும் முட்கள், கற்களை அகற்றும்படி ஜெபித்து விதைக்க வேண்டும். அப்போது சாபம் மாற்றப்படும். நிலம் சாபமில்லாத நாற்றுக்களை எழும்பச் செய்யும்.

அடுத்ததாக, ஆபேலைப் போல காணிக்கை கொடுக்க வேண்டும். அதாவது தன் மந்தையின் தலையீற்றுகளில் கொழுமையான வைகளை தேவனுக்கு காணிக்கையாக கொண்டு வருகிறான். **(The Best)-த்** தேவனுக்கு தருகிறான். நமது வருமானம் எதுவானாலும் அதன் முதல் பலனின் சிறப்பானதை தேர்ந்தெடுத்து, காணிக்கைக்காக ஒதுக்கி வைத்து விட்டுத்தான், மற்ற செலவுகளுக்கு அதில் கை வைக்க வேண்டும். (நீதி.3:9) இக்காலத்திற்கு "பணம்" தான் பொருத்தமாக இருக்கும். நாம் நீதிமான்கள் என்றால் கண்டிப்பாக விதைப்போம்.

## நீதிமானின் விதைப்பின் பலன் காப்பாற்றப்படும்.

நோவா கர்த்தருக்கு முன் நீதிமானாயிருந்ததினால் அவன் "விதை"ப்பின் பலன்கள் காப்பாற்றப்படுகின்றன. அவை விருத்தியடைந்து பெருகியதால்தான் இக்கால உலகமே இருக்கிறது. (ஆதி. 7:2,23 8:17).

ஆனால் இக்கால விசுவாசிகள் சாத்தானின் சாக்குப் போக்குகளுக்குள் மாட்டிக் கொண்டு விதைக்காமல் தட்டிக் கழிக்கிறார்கள். "தசம பாகம் - நியாயப்பிரமாணம்"

அதனால் அதைப் பின்பற்ற வேண்டாம் என்று நினைத்து தேவனுக்குரிய 10%யும் இறுக்கமாக பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். கீழேவரும் **a & b**-ஐக் கவனியுங்கள்.

***a.) தசமபாகம் மட்டுமல்ல, கொலை செய்யாதிருப்பாயாக! விபச்சாரம் செய்யாதிருப்பாயாக! இவையெல்லாம் கூட நியாயப்பிரமாணம்தான்!***

***b.) 10% தான் நியாயப்பிரமாணம், 15, 20, 25% இதெல்லாம் நியாயப்பிரமாணம் இல்லையே! (2கொ. 8:3)***

## *தசம பாகம் பழைய ஏற்பாடுதானே ?*

அப்படியா? மத்தேயு 23:23க் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். *(வசனத்தின் அர்த்தத்தை புரட்டி விட வேண்டாம்!).* இந்த வசனத்தில் நீதி, இரக்கம், விசுவாசம் ஆகியவை தசமபாகத்தை விட முக்கியமானது என்றுதான் இயேசு வலியுறுத்துகிறாரே தவிர, தசம பாகம் கொடுக்க வேண்டியதில்லை என்று நிச்சயமாகச் சொல்லவில்லை.

தசமபாகம் கொடுக்காவிட்டால் ஐசுவரியம் அடைய முடியாது. அவ்வளவுதானே? தரித்திரராக இருந்தால் பரலோக இராஜ்ஜியம் போக முடியாதா என்ன? என்று வாதிடுவோரும் உண்டு. உண்மைதான், தரித்திரம் பரலோக இராஜ்ஜியத்திற்கு தடையானது இல்லைதான், ஆனால் பரலோக இராஜ்ஜியத்தை ஒரு வேளை இழக்கக் கூடிய சூழ்நிலைக்கு தரித்திரம் நம்மை வழி நடத்திவிடக் கூடிய அபாயமும் உண்டு என்பதையும் மறுக்க முடியாது!

அதெப்படி? எப்படியென்றால், பணப்பற்றாக்குறை ஏற்படும் போது, நம் வாழ்க்கையின் அஸ்திபாரங்களான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றில் அசைவு ஏற்படுகிறது. இதனால் மனஅழுத்தம், சோர்வு, கவலை, கண்ணீர், விரக்தி ஆகியவைகள் சூழ்ந்து நம் விசுவாசத்தை தாக்கி சேதப்படுத்துகிறது. (நீதி.10:15) உண்மையான மனசாட்சி “ஆம்” என்று இந்த உண்மையை ஒத்துக் கொள்ளும்.

பவுலைப் போல ஒரு சிலர் இவற்றை மேற்கொள்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருந்த போதிலும், பெரும்பான்மையான விசுவாசிகளுக்கு அது முடிவதில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஆகையால்தான் தரித்திரத்தைக் குறித்து விழிப்புடனும், எச்சரிக்கையுடனும் இருப்பது மிக அவசியம் என்கிறேன்.

## *அப்போஸ்தலர் உபதேசத்தில் தசமபாகம் இல்லையே!*

கலாத்தியர் 3:29 இதற்கு “இருக்கிறது” என்று பதில் சொல்லுகிறது. நாம் இரட்சிக்கப்படும் போது இயேசுவின் மூலமாக ஆபிரகாமின் சந்ததியினராகவும், சுதந்தரவாளி களாகவும் மாறுகிறோம். யோவான் 8:39ல் “நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாய் இருந்தால், ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே” என்று இயேசு சொன்னார். ஆபிரகாமின் கிரியை என்ன? அவர் தேவனை நேசித்தபடியினாலும், அவரை எல்லாக் காரியங்களிலும் முன்னிறுத்தியதாலும் தசமபாகம் கொடுத்தார். அதாவது அவர் தசம பாகம் கொடுத்து தேவனை, தான் எல்லாக் காரியத்திலேயும் முன்னிறுத்தியிருப்பதை நிரூபித்தார். ஆனால்... ஆபிரகாமின் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை பெறும் ஆசை மனசுக்கு இருக்கிறது. ஆனால் கொடுக்க மட்டும் விருப்பம் இல்லை!

அது சரி, ஆபிரகாமின் கிரியைகளை தியானிப்போம், விசுவாசிப்போம், ஆனால் செயல்பட முடியவில்லை, ஆனால் ஆசீர்வாதம் மட்டும் வந்து குவிய வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களுக்கு; “கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை” என்ற பழமொழி மிகவும் பொருத்தமாக இருக்கும்.

1கொரி 16:2ல் பவுல் கொரிந்து சபையினருக்கு எழுதும் நிருபத்தில் தேவனுக்கு

காணிக்கை கொடுப்பதைப் பற்றிய ஆலோசனையை எழுதியிருப்பதைப் பார்க்கலாம்.

"... உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாவது தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன்". இந்த வசனத்தில் வரும் "எதையாவது" என்பதை சபை விசுவாசிகளில் பலர்; 1% 2% அல்லது கொஞ்சம் சில்லரை, செலவழித்தது போக மிச்சம் மீதியிருக்கும் கொஞ்சமான பணத்தை, என்று தங்கள் வசதிக்கேற்ப அர்த்தம் எடுத்துக் கொள்கிறார்கள். அவ்விதமாகவே, ஏனோ தானோ என்று கொடுத்தும் வருகிறார்கள். வருமானத்தில் குறைந்த பட்சம் 10% கூட தேவனுக்கென்று கொடுக்க மனதில்லாதவர்கள் நம் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனைத்தான் முன்னிறுத்துகிறோம், அவர் சமூகம் எங்கள் முன் செல்கிறது, என்று எப்படி சொல்ல முடியும்.

நாம் விசனமுமாகவும், கட்டாயமுமாகவும் தேவனுக்கு கொடுக்க வேண்டிய அவசியமேயில்லை, பூமியும் அதன் நிறைவும் அவருடையது.

திராணிக்குத்தக்கதாக என்றால் 10% கண்டிப்பாக அதுவாகத்தான் இருக்கும். மனதின் நிர்ணயத்தின்படியென்றால் 10%க்கு மேலாக 15, 20% என்று கூட நாம் நிர்ணயிக்கலாம். உற்சாகமாக கொடுக்கும் போது 25, 30% கூட கொடுக்க முடியுமே! இப்படிப் பழக்கப்படுத்தும்போது அது 30, 50, 90% என்று கூட உயரும்! அப்படி கொடுத்த விசுவாசிகள், ஊழியர்களை சபை சரித்திரத்தில் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்களை அப்படி கொடுப்பதற்கு உற்சாகப்படுத்தியது எது? அவர்கள் தேவனை அதிகமாக நேசித்ததினாலும், முன்னிறுத்தியதாலும், கொடுக்கும்போது வருமானம் அதற்கேற்றவாறு அதிகரித்ததும்தான் காரணம். (2கொரி. 9:6)

## ஆபிரகாமுடனான ஆசீர்வாத உடன்படிக்கை...

தேவன் கண்டிப்பாக நம்மை ஆசீர்வதித்துதான் ஆக வேண்டும், அதை நாம் பெற்றுக் கொண்டு தான் ஆக வேண்டும் என்ற நியதிக்கான ஒரு உடன்படிக்கையைதான் ஆதி. 15.8-21 வரை வாசிக்கிறோம். இங்கே தேவன் ஆபிரகாமுக்கு செய்யும் காரியங்கள் அவனுடைய சந்ததியாராகிய நமக்கும்தான் என்பது புரியும். அடையாளம் கேட்ட ஆபிரகாமிடம் தேவன் தான் அவனை ஆசீர்வதிப்பதற்கு ஏதுவாக முதலில் காணிக்கையைதான் கொண்டு வரச் சொல்கிறார். ஆபிரகாமும் கீழ்ப்படிந்து காணிக்கையை (விதைகளை) கொண்டு வருகிறான்.

ஆண்டவர் செய்யும் காரியங்களை பொறுமையோடு கவனித்துக் கொண்டிருந்தவனுக்கு பிசாசினால் பிரச்சனைகள் வருகிறது. ஆசீர்வாதம் வராமல் தடை செய்வதற்காக சத்துரு காணிக்கையை குறி வைக்கிறான். ஆனால் ஆபிரகாம் சாத்தானை எதிர்த்து வெற்றி காண்கிறான். என்றபோதிலும் மாமிச பலவீனம் அவனை தாக்க, அவிசுவாசம் அவனுடைய விசுவாசத்துடன் யுத்தத்திற்கு வருகிறது.

ஆனால் அந்த சூழ்நிலையை தேவன் பயன்படுத்தி அவனுடன் பேசுகிறார். நாம் பொருளாதார நெருக்கடியில் சிக்கி, நம்பிக்கையிழந்து போன நாட்களில்தான் தேவன் ஆசீர்வாதத்திற்கான வெளிச்சத்தைத் தருகிறார். ஒளியிழந்து போன நாட்களில்தான் நம்பிக்கையின் படிகளைக் காட்டுகிறார். ஆனால் ஆசீர்வாதத்தை அவ்வளவு எளிதாக பெற்றுக் கொள்ள சாத்தான் விட மாட்டான். ஏனென்றால் அவைகளும் சுவிசேஷ வித்துக்கள் என்று அவனுக்குத் தெரியும்.

ஆனால் இயேசுவிற்கு முன்பாக அவன் பாச்சா (தந்திரங்கள்) எடுபடாது. இயேசு நம் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டு, அவைகளை விதைகளாக அங்கீகரித்து, உடன்படிக்கையை நிறைவு செய்கிறார். (ஆதி.15:17,18) இனிமேல் சாத்தானால் ஒன்றும் செய்ய முடியாது. நம் விதைப்பை கெடுக்க அவன் முயற்சிக்கும் போதெல்லாம், உடன்படிக்கையின் தேவனாகிய இயேசுவைக் கூப்பிட்டால், உடனுக்குடன் உதவிக்கு வந்து, நம் விளைவை காப்பாற்றித் தருவார். இந்த காரியங்களை நாம் விசுவாசித்து எடுத்துக் கொண்டால் பாக்கியம் பெறுவோம். நம் பண விஷயத்தில் மட்டுமல்ல,

சகல பிரச்சனைகளிலும் இந்த உடன்படிக்கை வேலை செய்யும்.

## பண ஆசீர்வாதம் வேதத்திற்கு எதிரிடையானதா ?

வாக்குத்தத்தம் வேலை செய்யாத உலக பணம் வேதத்திற்கு எதிரிடையானது தான். இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்பவர்களுக்கு அப்படித்தான் தெரியும். ஏழைகளாகவே இருந்து விட்டால்தான் தேவனுடனான உறவு இறுக்கமாக இருக்கும். இல்லாவிட்டால் தளர்ந்து போய்விடும் என்று சொல்லி 1 தீமோத். 6:10வது வசனத்தைச் சிலர் சுட்டிக் காட்டுகிறார்கள். பணம் அல்ல, பண ஆசைதான் தீமைக்கு வேர் என்று, அதில் சற்று உற்றுக் கவனித்தால் புரியும். சாத்தான் தன் புரட்டுவேலையால் சபையினரை இப்படித்தான் செயலிழக்க வைக்கிறான். விசுவாசிகள் தங்கள் கைகளில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும்படி செய்கிறான். பரிசுத்தாவியானவர்தான் அசைவாடி, அனல் மூட்டி, நம் கையிலுள்ள வெண்ணெய் உருகும்படி செய்ய வேண்டும்!

இன்றைய உலகத்தில் எத்தனையோ இலட்சக்கணக்கான தேவப் பிள்ளைகள் பொருளாதார பிரச்சனையில்லாமல், ஐசுவரியம் பெற்று வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் தேவன் வெறுக்கிறாரா? இல்லையே! (ஆதி.13:2)

இவர்களுடைய விளைச்சலில் ஒரு பகுதி சுவிசேஷ வயலில் விதைகளாக மாறுவதால், பாதாள வாசலை நோக்கி படையெடுத்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்கள் திசை திருப்பப்படுகின்றன. பரலோகத்தை நோக்கி அவர்களின் பார்வை திரும்புகிறது. இத்தகைய மாபெரும் ஊழியத்தை செய்யும் தன் பிள்ளைகளை தேவன் எப்படி வெறுப்பார்? சுவிசேஷ கைப்பிரதிகள் தங்களைத் தாங்களே அச்சிட்டுக் கொள்வதில்லை, பணம் தேவை! ஒரு **Bible Centre-** க்குப் போய் புத்தகங்களை வாங்கிக் கொண்டு "என்னிடம் பணம் இல்லை, உங்களுக்காக ஜெபிக்கிறேன்" என்று சொல்லி விட்டு புறப்படுங்கள். பிறகு தெரியும், ஊழியத்திற்கு பணம் தேவையா? இல்லையா? என்று! "வாரியிறைத்தான், ஏழைகளுக்கு கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்" சங். 112:9 வசனத்தை கவனியுங்கள். வேதத்தில் உள்ள தேவனுடைய வசனங்கள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதே தேவனின் விருப்பம், நியதி. ஏழைகளாக இருப்போமானால் இந்த வசனத்திற்கு எப்படி கீழ்ப்படிய முடியும்? எப்படி வாரியிறைக்க முடியும்? ஆகையால் முதலில் வசனத்திற்கு கீழ்ப்படிய ஆரம்பிப்போம். வசனத்திற்கு கீழ்ப்படிந்து, ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், அதற்கு முதலில் தேவனை அறிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகும். (தானி.11:32)

## தேவனை அறிந்துக் கொள்ளுங்கள்...

அதுதான் தேவனை அறிந்துக் கொண்டிருக்கிறோமே? அதனால்தானே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்? என்று கேட்கலாம். ஆனால் உண்மையில் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, அபிஷேகம், வரங்கள், பெற்று ஊழியம் செய்துக் கொண்டிருக்கும் போது கூட தேவனை அறியாமல் இருந்துவிடக் கூடிய வாய்ப்பு உண்டு. அதாவது நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடந்தால்தான் அவரை அறிந்திருக்கிறோமென்று அர்த்தம். ஆயிரம் பிரசங்கங்கள் கேட்டுக் கொண்டிருப்பதைவிட தேவனுடைய ஒரேயொரு வசனத்துக்கு கீழ்ப்படிய முயற்சிப்போம்.

இதை எளிதாக புரிந்துக் கொள்வதற்கான ஒரு உதாரணம். மிகப் பெரிய காடுகளில் தாவரம், மற்றும் விலங்குகள் பற்றிய ஆராய்ச்சிக்காக செல்லும் ஆராய்ச்சியாளர்கள், காட்டில் வழி தெரிவதற்காகவும், வெளியே வருவதற்காகவும் அதன் பாதைகள் வரையப்பட்ட வரைபடமொன்றை கையில் வைத்திருப்பார்கள். பல கி.மீட்டர்கள் பரப்பளவுள்ள பெருங்காடுகளின் நடுவில் மாட்டிக் கொண்டாலும் திகைத்து நில்லாமல்,

வரைபடத்தை உற்றுக் கவனித்து வெளியே வந்து விடுவார்கள். **Jack Heartman** என்ற தேவ ஊழியர் தன் புத்தகத்தில் இவ்விதமாக குறிப்பிட்டுள்ளார். “திக்குத் தெரியாத பெரிய காட்டில் தொலைந்து போய்விட்டால் தப்பித்துக் கொள்வது எப்படி?” என்ற ஒரு புத்தகம், நாம் நடுக்காட்டில் தொலைந்து போயிருக்கும் போது நம் கையில் கிடைப்பதாக வைத்துக் கொள்வோம். என்ன செய்வோம்? ஒரு மரத்தடியில் உட்கார்ந்து சாவகாசமாக அதைப் புரட்டிக் கொண்டிருப்போமா? இல்லையே, உடனடியாக நன்றாக வெளிச்சம் இருக்கும் ஒரு இடத்தில் அதைக் கொண்டுபோய், படபடக்கும் இருதயத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, வேகமாக வாசிப்போம். பிறகு அதில் சொல்லப்பட்டிருக்கும் ஆலோசனைகளின்படி வழியை கண்டு பிடித்து, உடனடியாக தாமதிக்காமல் அந்த பாதையில் செல்ல முயற்சிப்போமா இல்லையா?

பொருளாதார பிரச்சனையில் சிக்கியிருக்கும் ஒவ்வொரு தேவபிள்ளையும் இவ்விதமாக வேத வசனத்தை முயற்சித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? பொருளாதார தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள வேத ஆசீர்வாத வாக்குத்தத்த வசனங்களில் வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை வெறுமனே வாசித்துக் கொண்டு இருக்காமல், அந்த நடுக்காட்டில் சிக்கிக் கொண்ட மனிதனின் நிலைமையை நினைவில் நிறுத்தி, வசனத்தின் கட்டளைப் பகுதியை அப்படியே விழுங்கி விடவேண்டும். பிறகு அதன்படியே செய்ய வேண்டும்;

முடிவாக, பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளியே வந்து விடலாம். இது ஒரே நாளில் நடக்கிற காரியமல்ல, வெற்றி இலக்கில் காலடி பதிக்க குறைந்தது, சிலருக்கு அதிகபட்சமாக 4 வருடங்கள் ஆகலாம். **(Joyce Mayer, Vijay-T.V.).** பொறுமை தேவை. ஆனால் நாம் முயற்சியை ஆரம்பித்த நாளன்றே நம் வெற்றியும் ஆரம்பமாகி விடுகிறது என்பதும் உண்மை.

## பொறுமை:

ஆவிக்குரிய குணாதிசயங்களில் பொறுமையும் முக்கியமானதொன்றாகும். பொறுமையில்லாவிட்டால் நிலைமை விபரீதமாகிவிடும். **Orange Signal** -லில் நின்றுக் கொண்டு Red, Green Signal விழுமுன் ரோட்டை கடக்க முயன்றால் என்னவாகுமோ, அதுதான் நடக்கும். ஆசீர்வாதத்திற்காக **Claim** பண்ணி ஜெபித்து, விதைத்து விட்டு, தேவனை கிரியை செய்ய விடாமல் அவருக்கு முன்பாக ஓடுவது அவரை கிரியை செய்யவிடாமல் கெடுக்கிறது. கண்டிப்பாக அடுத்தது Green Signal விழத்தான் போகிறது. அதுதான் **Traffic rule.**

புதைத்த விதையை சில நேரங்களில் வெளியே எடுத்து தோலுரித்துவிட்டு மீண்டும் நடும் விசுவாசிகள் பெற்றுக் கொள்ள முடியாமல் போகிறது. அப்படிச் செய்யும் போது விதை வளரும் தன்மையை இழக்கிறது. T.V. -ல் ஒரு Programme -ஐ பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒரு காட்சி என்னை யோசிக்க வைத்தது. பூமியில் ஊன்றப்பட்ட ஒரு விதை சில வினாடிகளில் நிலத்தை பிளந்து வெளியேறி வளர்வதைப் போல, மொட்டாக இருந்த ஒரு ரோஜா மலர் இரண்டே வினாடிகளில் வேகமாக விரிவதைப் போலவும் காண்பித்தார்கள். அது ஒரு **Computer Graphics** தான் என்றாலும், இப்படி நடந்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்தேன். நன்றாக இருக்கும்தான், ஆனால் நாம் மாயாஜால உலகத்தில் வாழவில்லையே! அதனால் அவசரப்படாமல் இடைப்பட்ட காலத்தில் தேவன் நம்மைத் தகுதிப் படுத்த விட்டுக் கொடுக்க வேண்டும்.

ஏன் தகுதிப்படுத்த வேண்டுமென்றால், தினம் ஒரு பாக்கெட் சிகரெட் பிடிக்கும் ஒருவரைத் தேவன் ஆசீர்வதிப்பதாக வைத்துக் கொள்வோம். அது அவர் பாவத்தையும் சேர்த்து ஆசீர்வதிப்பது போலாகுமே! அதிக பணம் கைக்கு வந்ததும் அவர் பாவம் அதிகமாகுமே தவிர குறையாது. பணத்தால் ஒரு மனிதன் நித்தியத்தை இழக்க காரணமாக இருக்குமேயானால் தேவன் தர யோசிக்கவே செய்வார். பணம் இல்லாமல் பரலோகம் போய்விடலாம். ஆனால் இயேசு இல்லாமல் போக முடியாதே? அதனால்

அவர் நம் பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்தும் வரை பொறுத்திருக்கிறார்.

## வயலே வாழ்வு!

T.V. என்றவுடன் இன்னொரு காரியம் ஞாபகத்திற்கு வந்தது. T.V.-ல் பொதிகை என்ற ஒரு Channel ல் "வயலும் வாழ்வும்" என்ற ஒரு அரை மணி நேர நிகழ்ச்சியைக் ஒளிபரப்புகிறார்கள். அதிகபட்சம் ஒரு 10 நிமிடம் பார்த்தாலே சலிப்புத் தட்டும். ஆனால் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் அவ்விதம் நினைக்காமல் அதை ஆவலோடு கவனித்திருந்து, அதில் சொல்லப்படும் ஆலோசனைகளை பிரயோஜனமாக்கிக் கொள்கிறார்கள். காரணம் விவசாயம் என்பது அவர்களது உயிர் நாடி; ஒவ்வொரு விசுவாசிக்கும் "தரிசனம்" உயிர்நாடியாக இருப்பதைப் போல. இந்த கடைசி காலத்தில் சாத்தான் தனக்கு கொஞ்சம் காலம்தான் என்பதை அறிந்து, இயேசுவின் நற்செய்திப் பணிக்கு எதிராக தனது கொத்தளங்களை போட்டு வருகிறான். அகில உலக நாடுகள் (பூமி), இந்தியா (தேசம்), தமிழ்நாடு (மாநிலம்), தூத்துக்குடி (மாவட்டம்), போல்டன்புரம் (சிற்றூர்) என்று ஒவ்வொரு எல்லையோரங்களிலும் நின்று சிங்கமாக கெர்ச்சிக்கிறான்! அதனால் தேவ பிள்ளைகள் ஒவ்வொருவரும் விதைப்பைக் குறித்த தரிசனத்தையும் List-ல் சேர்த்துக் கொள்வது நல்லது.

தரிசனமாக எடுத்துக் கொண்டால்தான் அதில் நாட்டம் இருக்கும். நெல் பயிரிடும் ஒரு தேவனை அறியாத உலக விவசாயியை கருத்தில் எடுத்துக் கொள்வோம். அவனுக்கு பணம் மட்டும் குறியல்ல என்பது ஒரு ஆச்சரியமான உண்மை!(?) அது எப்படியாகும்? அவனுடைய சம்பாத்தியமே அதுதானே என்று தோன்றலாம். உண்மைதான் என்றாலும், பணம் மட்டுமே அவனுடைய நோக்கமாக இருந்திருந்தால், கஞ்சா பயிரிடப் போயிருப்பானே! நெல் பயிரிடுவதால் கிடைக்கும் லாபத்தை விட பல நூறு மடங்கு அதிகம் சம்பாத்தியம் தரக் கூடிய அந்த தொழிலை அவன் ஏன் செய்யவில்லை? காரணம், அவன் தன் தொழிலை நேசிக்கிறான், அவனுடைய வயல் வெளி, மண் வாசனை, பளிச்சென்றிருக்கும் கிராமச் சூழல், சரசரக்கும் கதிர்கள், கதிர் கொய்யும் குருவிகள், அதை ஓட்ட வைக்கப்பட்டிருக்கும் தகர டப்பாக்களின் கூச்சல்கள், இவை யாவும் அவனை விட்டு பிரிக்க முடியாத அளவுக்கு ஒன்றித்து விட்டதுதான் காரணம். அதோ அரிக்கட்டுகளுடன் வரப்பின் மேலாக அவன் கெம்பீரமாக நடந்து வருவதைப் பார்த்தாலே புரியும்! (சங்.126:6)

சாதாரண ஒரு பாமர விவசாயியின் இந்த தொலைநோக்குப் பார்வை ஆவிக்குரியவர்களாகிய நமக்கும் தேவை. அவனின் தொலைநோக்கு தரிசனம் என்னவென்றால், விவசாயிகள்தான் தேசத்தின் முதுகெலும்பு என்பதும், உலகிற்கு உணவளித்து மனிதர்களின் உயிர்காப்பதே விவசாயிகள்தான் என்பதும்தான். கஞ்சா பயிரிடுவதால் மக்களைக் கொல்லத்தான் முடியும் என்பதும் அவனுக்குத் தெரியும்.

ஒரு உலக விவசாயிக்கு தன் தொழில் மீது இவ்வளவு devotion இருக்குமானால்; ஆவிக்குரிய விவசாயிகளாகிய நமக்கு இது மிக அதிகமாக இருக்க வேண்டுமல்லவா? அதுவும் இயேசு வரப்போகும் நாட்களில் இன்னும் மிக மிக அதிகமாக இருக்க வேண்டும் என்பதை உணர்வோமாக. "வயலும் வாழ்வும்" என்ற தலைப்பை விட "வயலே வாழ்வு" என்று சொன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

வயலில் விதை விதைத்தால்தான் நமக்கு சாப்பாடு கிடைக்கும், உயிர் வாழ முடியும். அதே நிலைதான் ஆவிக்குரிய வயல் நிலத்திலும். நாம் விதைக்காவிட்டால், சுவிசேஷம் அறிவிக்க முடியாமல், ஆவிக்குரிய உணவாகிய வசன பஞ்சத்தால் ஆத்துமாக்கள் அழிந்துப் போகும், நித்திய ஜீவனை இழந்து போவோம்.

## விண்ணை முட்டும் வித்தின் மகிமை!

மனுக்குலத்தை மீட்க இயேசு பூமியின் தாழ்விடத்தில் மூன்று நாட்கள் விதையாக புதைக்கப்பட வேண்டியதாய் இருந்தது. நமக்கும் இதே கதிதான்! இயேசுவுக்காக, என் மகிமை விதையாக புதையுண்டபோது அழியாத நித்திய மகத்துவங்கள் பொக்கிஷங்களாக துளிர் விட்டதை பார்க்க முடிந்தது. ஆத்துமாக்கள் அழியாமல் பாதுகாக்கப்பட சுவிசேஷ விளை நிலத்தில் இந்த "விதைகள்" புத்தகமும் ஒரு மகத்துவமுள்ள கடுகு விதையாக செயல்படப் போகிறது என்பது அதிக நிச்சயம். (மாற்கு 4:31,32) இந்த தரிசனம் நிறைவேறும் என்பதற்கான என் விசுவாசமும் விதையாக புதைக்கப் பட்டிருக்கிறது. அதன் வளர்ச்சி எந்த அளவில் இருக்கிறது என்பது அதை துவக்கியவருக்குத்தான் தெரியும்! (எபி.12:1) அறுவடை காலத்தையும் அவர்தான் நிர்ணயித்திருக்கிறார்.

இவ்வளவு மகத்துவமான வேலைகளை செய்யும் விதை புதைத்த பிறகு கண்ணுக்குத் தெரிவதில்லை! நினைக்கும் போது மனதுக்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது? என்றாலும் வேறு வழியில்லை, விதையை மண்மூடினால்தான் அது முளைக்கும்! அது மறைவாகத்தான் தன் வேலையை செய்கிறது. நிலத்திற்கு அடியில் அது முளைத்தெழும்பும் அதிசயம் ஆண்டவருக்கு மட்டுமே தெரியும். நாம் தேவ இராஜ்ஜியத்திற்கென்று விதைக்கும் தசமபாகம், காணிக்கைகளும் இவ்விதமாக வெளியே தெரியக் கூடாது. அதனால்தான் வலதுகை கொடுப்பது, இடது கைக்குக் கூட தெரியக் கூடாது என்று கட்டளை இருக்கிறது. தாரை ஊதுவது சபையில் எங்கும் சாதாரணமாக காணப்படுகிறது. அப்படி செய்யும் போது விதையை மணல் மூடாத காரணத்தினால் அது சரியானபடி முளைத்தெழும்ப முடியாமல் போகிறது. விதையின் குருத்து வெளியே வந்து ஒரு செ.மீ, அல்லது ஒரு அங்குலம் அளவுக்கு வளர்ந்து அதோடு நின்று விடுகிறது.

சபைகளில் வைக்கப்பட்டிருக்கும் தசமபாக கவர்களில் பெயர், அட்ரஸ் எழுதாமல் வைக்க முயற்சிப்பது நல்லது. பெரிய அளவில் கொடுக்கப்படும் காணிக்கை சபை முன்னிலையில் பிரசித்தமாயிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவது மனித இயற்கை. உலகளவில் தெரிய வேண்டும் என்பதற்காக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் ஒளிபரப்பு செய்கிறார்கள். விபச்சாரமும் வேசித்தனமும் நிறைந்த இந்த உலக மனிதர்களால் நம் தியாகம் ஏன் பாராட்டப்பட வேண்டும்? அதனால் என்ன பிரயோஜனம். மகா பரிசுத்தராம் பிதா, குமாரன், பரிசுத்தாவியானவராகிய தேவனால் இரகசியமாக நம் ஆவியுடன் சொல்லப்படும் சாட்சியே நித்திய மகிழ்ச்சி தருவதாகும். அப்படியே தேவனுக்கு சித்தமானால் அவரே நம் கிரியைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவார். (மாற்.4:22) நாம் ஒரு குறிப்பிட்ட சபைக்கோ, சபை போதகருக்கோ கொடுக்கவில்லை. தேவனுக்காகவும், அவரின் இராஜ்ஜிய கட்டட வேலைக்காகவும் தான் கொடுக்கிறோம். அதற்கு அட்ரஸ் எதற்கு?

யோவான் ஸ்நானகனை விட இதற்கொரு நல்ல உதாரணம் இருக்க முடியாது. தன்னை உலகத்திற்கு பிரபலப்படுத்த முயற்சிக்காமல் "வனாந்தரத்தில் கூப்பிடும் சத்தமாக" மட்டுமாக இருந்து மண்ணில் சுவிசேஷ விதையாக மடிந்தார். அவர் கதை அத்தோடு முடிந்து விடவில்லை. அந்த விதையில் இருந்து எண்ணுக்கடங்காத சுவிசேஷகர்கள் நாற்றுகளாக முளைத்தெழும்பினர். இன்றளவும் இளந்தளிரடித்து எழும்பிய வண்ணம் இருக்கின்றனர். இப்படிப்பட்ட "வனாந்தர சத்த" ஊழியர்களால் தான் தேவ இராஜ்ஜியமே கட்டப்பட்டு வருகிறது. யோவான் ஸ்நானகனைப் பற்றி கர்த்தர் இயேசு தன் வாயினால் சொன்ன சாட்சியைதான் இந்த (மத்.11:11)ல் பார்க்கிறோம்.

நாமும் கூட இயேசுவை பிரதிபலித்துக் காட்டுகிற, ஆனால் கண்ணுக்குத் தெரியாத கண்ணாடியாக இருந்து சுவிசேஷத்திற்காக விதைப்போம். சூரியோதயத்திற்கு முன்னதாகவே இரகசியமாக புறப்பட்டு வந்து "எழும்பு, பொழுது விடிகிறது" என்று காதோடு சொல்லிப் போகிற மெல்லிய வைகறை காற்றாக மட்டுமே இருக்க பிரியப் படுவோம். இரகசிய விதைகளை விதைப்போம், பாக்கியம் பெறுவோம்.

## பிரமிப்பூட்டும் ஆழ்கடல் அதிசயங்கள்

**Discovery Channel**-லில் ஒளிபரப்பாகும் ஆழ்கடல் காட்சிகளைக் பற்றி மூழ்காளிகளிடம் விசாரிக்கும்போது அவர்களின் அனுபவங்கள் பிரமிப்பூட்டுபவையாக இருக்கும். மூழ்காளிகளுக்கான உடையணிந்து தண்ணீரினுள் மூழ்கியவுடன் முதலில் சிவப்பு, ஆரஞ்சு நிறங்களும், கொஞ்சம் ஆழத்திற்குள் இறங்கியதும்“மஞ்சள்” நிறமும், இன்னும் செல்லச் செல்ல “பச்சை” நிறத்திலும் காட்சியளிக்குமாம். 200 அடிகளுக்கு கீழாகப் பச்சை கலந்த நீலமாகவும், 600 அடியில் கருநீல நிறமாகவும் கடல்நீர் காட்சியளிக்கிறது. அடுத்ததாக ஆழ்ந்த சாம்பல் நிறம், (நிறமாலையில் உள்ள ஊதா நிறம் தெரியவே தெரியாதாம்). பிறகு பெயர் சொல்ல முடியாத நிறங்கள் தோன்றி முடிவில் நம் கற்பனையையும் மிஞ்சிய ஒரு கருப்பு நிறத்தில் வந்து முடியுமாம். இப்படிப்பட்ட ஆழங்களில் வாழும் உயிரினங்களின் உடல் பகுதியில் ஒளியை உமிழும் Electric Light போன்ற பகுதிகள் இயற்கையாகவே அமைந்துள்ளன.

ஆழமான பகுதிகளில் அழுத்தத்தின் காரணமாக விஞ்ஞானிகள் “உருக்கு ஆழ்கோளம்”என்ற ஒரு சிறப்பு அமைப்பில் இருந்து வேலை செய்கின்றனர். இப்பகுதிகளில் வாழும் உயிரினங்களின் உடலும் அழுத்தத்தை சமாளிக்கும் விதத்தில் கெட்டியான தோல், கடினமான ஒடுகள் உடைய அமைப்புடன் காணப்படுகின்றன.

வேத வாசிப்பும், இப்படிப்பட்ட ஆழ்கடல் அனுபவங்களே. ஆழங்களுக்குள் மூழ்காமல் மேலோட்டமாக “கடனே” என்று வாசிப்பதால் ஆசீர்வாதங்களை சேகரிக்க முடியாமல் போகிறது. எசேக்கியேல் 47:1-5ல் வேத வாசிப்பின் 4 நிலைகளை விளங்கிக் கொள்ள முடிகிறது.

முதல் நிலையில், “கணுக்கால் அளவு” என்பதில் அலையோரத்தில்... கணுக்கால் நனையும்படி நடக்கும் அனுபவம், ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்கும் சிறிதளவான ஞானம் பெற்றுக் கொள்கிறோம்.

இரண்டாம் நிலையில், “முழங்கால் அளவு” தண்ணீரில் வரும் போது... விதைக்க ஆரம்பிப்போம்.

மூன்றாம் நிலையில், “இடுப்பளவு” அனுபவம் என்பது, அதாவது வயலில் இறங்கி பொறுப்புள்ள விவசாயியாக விளைச்சலைக் கவனிக்கும் வேலைகளில் சிரத்தையுடன் ஈடுபடுவோம்.

நான்காம் நிலையில், “நீச்சல் ஆழம்” - ஆழ்கடலில் மூழ்கி ஒரு “ஆழ் மூழ்காளி”யின் அனுபவங்கள் ஆவிக்குரிய **Dimensional** -ல் பெற்றுக் கொள்ள முடியும். ஆசீர்வாத **Formula** தெரிந்து விட்ட காரணத்தினால், வேகமாக கூட்டிக் கழித்து கணக்குப் போட்டு ஒரு வழியாக விடையைக் கண்டு பிடிக்க முயற்சிப்போம். வசனங்களுக்கு கீழ்ப்படியும் திராணி வர ஆரம்பிக்கும். ஆசீர்வாதத்திற்கான அறிகுறிகள் ஒவ்வொன்றாக முளைக்க ஆரம்பிக்கும். நன்றாகத்தான் இருக்கிறது, ஆனால், கடலில் மூழ்கி முத்தெடுப்பவன் படும் பாடுகளை கடந்து செல்ல நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

## முத்து (Pearl):

“முத்து” சிப்பிக்குள்ளாக எவ்விதம் உருவாகிறது? தெரிந்தும் தெரியாமலுமிருக்கும் விஷயமிது. முத்துச் சிப்பியின் கடினமான ஓட்டுப் பகுதிக்கும் மெல்லியதான உடல் பகுதிக்கும் இடையிலான இடைவெளியில் சகதியோ, மணலோ, சிறிய கற்களோ போய் சிக்கிக் கொள்ளும். இதனால் அந்த பூச்சிக்கு ஊறல் எடுப்பது போன்ற உணர்வு உண்டாகவே, அதை தவிர்ப்பதற்காக சிக்கியிருக்கும் அந்த பொருள் மீது ஒரு திரவத்தை சுரக்கிறது. இதே போல பல முறைகள் செய்து **irritating feeling**- ல் இருந்து விடுபட முயற்சிக்கிறது. நாட்கள் ஆக ஆக, காலம் செல்லச் செல்ல அந்த திரவத்தினுள் இருக்கும் பொருளும், திரவமுமாக சேர்ந்து முத்தாக

உருவெடுக்கிறது. அந்த பூச்சிக்கு ஏற்பட்ட உபத்திரவமே நல்லதொரு முத்தாக உருவாகியது.

0.05 கிராம் எடை, 5 செ.மீ அகலமுடைய இச்சிறிய முத்துக்கள் தங்க நகைகளில் பதிக்கப் படுகின்றன. இத்தனை உன்னத இடத்தை பிடித்திருக்கும் இந்த முத்தின் கருவறை மிக அற்பமானது. வெறும் மணல் துகள்கள்தான் இதன் ஆரம்பம்.

ஒரேயொரு ரூபாய்தான் இருக்கிறது என்றாலும், அசட்டை பண்ண வேண்டாம். அதுவும் விதையாக செயல்பட்டு மாபெரும் அறுவடையைக் கொண்டு வரலாம்.

பூச்சிக்கு மணல் துகள்கள் ஓட்டினுள் புகுந்ததும் மிக கஷ்டமாக இருந்திருக்கும் தான். என்றாலும் அந்த உபத்திரவத்தை விட்டு அது ஒதுங்க முயற்சிக்காமல் தன்னுள் வைத்து வளர்த்து, அதையே ஆசீர்வாதமாக மாற்றிக் கொண்டது.

தேவன் நமக்கு உபத்திரவங்களை அளிப்பதில்லை. ஆனால் அனுமதிக்கிறார். அவ்விதமாக நமக்கு தேவன் அனுமதிக்கும் உபத்திரவங்களில் ஒன்றே “தரித்திரம்”. எவ்விதமாக அந்த கடல் பூச்சி தனக்கு வந்த உபத்திரவத்தால் வேதனைப் படாமல், அதே நேரத்தில் அதை வெளியேற்றவும் செய்யாமல், அதையே ஆசீர்வாதமாக மாற்றியதோ, அதே செயல்பாடு நமக்கும் தேவை. தரித்திரத்தில் மூழ்க ஆரம்பிக்கும் போதுதான் “ஐசுவரியத்தை” குறித்ததான தேவ இரகசியங்கள் கண்ணில் பட ஆரம்பிக்கின்றன. அது ஒரு ஆச்சரியமான, ஆனால் மறுக்க முடியாத உண்மை. தரித்திரம் நம்மை சூழ்ந்தாலன்றி நாம் ஐசுவரியம் அடைய முயற்சிக்க மாட்டோம். தேவஇராஜ்ஜியத் திற்காக வித்திடவும் மாட்டோம்! இந்த தேவ இரகசியத்தின் அடிப்படையில்தான் தேவன் செயல்படுகிறார்.

## “ மாதிரி ” (Model) அவசியமா ?

ஆமாம், அவசியம்தான். இந்த ஆலோசனை எபி. 6:11-15-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வாக்குத்தத்தங்கள் காட்டிய வழியில் சென்று ஆசீர்வாதம் பெற்ற ஒரு ஆவிக்குரிய பணக்காரரை நமக்கு முன் மாதிரியாக வைத்துக் கொள்ளலாம். ஆபிரகாமை கவனித்துப் பார்க்கும் போது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற என்னவெல்லாம் செய்தார் என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

விசுவாசத்திற்கு இடையில் கத்திரிக்கோலை வைக்காமல், அதை தொடர்ச்சியாக முடிவு வரை நீடிக்க விட்டுவிட வேண்டும். முடிவிலுண்டாகும் பொறுமை “நாம் தகுதியானவர்கள்தான்” என்பதை இயேசுக்கு அறிவிக்கிறது. ஆபிரகாம் இதைத்தான் செய்தார். (ரோ.4:22) வேதத்தின் வெளிப்படுத்தின ஆகமத்திற்கு பிற்பாடு வாழ்ந்த பரிசுத்தவான்களும் பலர் இப்படிப்பட்ட விசுவாச சாதனை செய்திருக்கிறார்கள். அவர்களையும் மாதிரியாக நோக்கிப் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டின் காலத்தில் நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தன் காலடி சுவடுகளை நமக்கு முன் மாதிரியாக பதித்துவிட்டுப் போனார். (1பேதுரு. 2:21)

“கும்மிருட்டாக இருந்தாலும் நட்சத்திரங்கள் உதிக்கும் என்ற நம்பிக்கையில் ஜன்னல்களை திறந்து வைப்போம்”. காணாதவைகளை விசுவாசித்து நமக்கு முன் நித்தியத்திற்குள் பிரவேசித்திருக்கும் விசுவாசிகளின் தொடர்ச்சியாளர்கள் நாம்.

பட்டாம் பூச்சியாக ஆசை, ஆனால் கம்பளிப்பூச்சியைக் கண்டு முகத்தை சுளிக்கிறோமே! அந்த கம்பளிப்பூச்சி தானே இப்போது கனவுரு வண்ணங்களில் வானில் பறக்கிறது? ஆனால்... இடைப்பட்ட காலத்தில் அது கூட்டுப்புழுவாக கூட்டிற்குள் காத்திருந்து தன்னை தயார்படுத்தியதையும் மறந்து விடக்கூடாது.

கம்பளிப்பூச்சியைப் போன்றிருக்கும் வறுமையை நினைத்து முகம் சுளிக்காமல் காத்திருப்போம்.

இறக்கைகள் உள்ளுக்குள் உருவாகிக் கொண்டிருக்கிறது அதி உன்னத வண்ணத்துப் பூச்சிக்காக...

# பூதக் கண்ணாடியுடன் வரும் சாத்தான்

கையில் பணமில்லாமல் தடுமாறும் நேரங்களில், நம் பொருளாதாரத்தின் முன்னால் **Microscope**-ஐ வைத்து, அதை மலைபோல பெரியதாக காட்டி, நமக்கு முன் இருக்கும் ஆசீர்வாத வழிகளை கண்களுக்கு தெரியாமல் ஆக்கிவிடுகிறான் சாத்தான். அவிசுவாச அறிக்கை செய்ய வைத்து சூழ்நிலையை இன்னும் மோசமாக்குவதில் மிக கெட்டிக் காரன் அவன். நீதி. 6:2 ன்படி நம் அவிசுவாச வார்த்தைகள் எட்டுக்கால் பூச்சியின் வலையாக மாறி நம்மை சிக்க வைத்து விடுகிறது.

ஒரு உதாரணத்தின் மூலம் இதை புரிந்துக் கொள்ள முயற்சிப்போம். **Edhar Allan** என்பவர் எழுதிய "புதிர் விலங்கு" என்ற புத்தகத்தில் தன்னுடைய நண்பர் **"X"** என்பவரின் அனுபவத்தை எழுதுகிறார்.

காலரா காய்ச்சலுக்கு மருந்து கண்டுபிடிக்கப்படாத அந்த காலத்தில் எட்ஹர் ஆலனின் நண்பர் **Newyork**-ல் தன்னுடைய உறவினரின் வீட்டில் தங்கியிருந்தாராம். கையில் ஒரு புத்தகத்துடன் ஜன்னலருகே உட்கார்ந்திருந்தவர், அனுதினமும் கேள்விப்படும் காலரா மரணச் செய்திகளினால் சோகத்தில் மூழ்கிவிட்டாராம்.

புத்தகத்தில் மனம் லயிக்காமல் ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்த போது...? மிக தூரத்தில் இருந்த ஒரு மலைச்சரிவின் உச்சியிலிருந்து கீழ்நோக்கி இறங்கிக் கொண்டிருந்த ஒரு "இராட்சச பிராணி"யின் மீது அவர் பார்வை நின்றது! நம்ப முடியாமல் தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டவர், மீண்டும் அந்த பிராணியின் மீது பார்வையை திருப்பியிருக்கிறார்.

1. அந்த பிராணி 74 பீரங்கிகளைக் கொண்ட பிரமாண்டமான போர்க் கப்பலின் அளவில் இருந்தது.
2. அதன் வாய், ஒரு யானையின் உடலளவு பருமனுள்ள சுமார் 65 அடி நீளமுள்ள தும்பிக்கையின் நுனியில் இருந்தது! துதிக்கையின் இரண்டு பக்கங்களிலுமிருந்து சுமார் 35 அடி நீளமுடைய இரண்டு பிரமாண்டமான கொம்புகள் முன்னோக்கி நீண்டு, பளபளத்தன!!
3. துதிக்கையின் அடியில் காடுபோல் முரடான முடிகள் மண்டிக் கிடந்தன!!!
4. சுமார் 10 அடி நீளமுள்ள இரண்டு கோரைப் பற்கள் கீழ் நோக்கி வளைந்திருந்தன!!!!.
5. 100 அடி நீளமுடைய 4 கனத்த சிறகுகளை விரித்த நிலையில் இருந்தது. அவைகளில் உலோகச் செதில்கள் நிறைந்திருந்தன!!!!!.
6. அதன் பிரமாண்டமான கருப்பு நெஞ்சுப் பகுதியில் பளிச் வெள்ளை நிறத்தில் தீட்டப்பட்டிருந்த அந்த "சாவுத்தலை சித்திரம்" நடுக்கமுற வைத்தது.

அவர் அரண்டு போய் எழும்ப முயற்சித்த போது, அந்த மிருகம் தன் துதிக்கை வாயை விரிய திறந்து அந்த மலைப்பிரதேசமே அதிரும் அளவுக்கு கர்ண கடூரமாக பேய்க் கூச்சல் போட்டதாம்!

நண்பர் மயக்கம் போட்டு விழுந்து, பிறகு மயக்கம் தெளிந்து எழுந்து, நடந்ததை உறவினரிடம் சொன்னதும் அவர் வாய்விட்டு சிரித்து விட்டாராம். நண்பர் "X"-க்கு மூளை குழம்பி விட்டதாக அவர் நினைத்திருக்கலாம்!

திடீரென்று மீண்டுமாக அந்த பயங்கர பிராணி தோன்ற நண்பர் "X"- மீண்டுமாக அலற, தன் கண்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை என்று உறவினர் சாதித்தாராம். என்றாலும் நண்பர் "X"-ன் கண்ணுக்குத் தெரிந்த அந்த விந்தை மிருகத்தின் உருவ அமைப்பை கேட்டு குறிப்பெடுத்துக் கொண்டாராம். பிறகு புத்தக அலமாரிக்குச் சென்று "இயற்கை வரலாறு" என்ற புத்தகத்துடன் வந்தாராம். பிறகு "X"-க்குப் புரிகிற மாதிரி விளக்கம் கொடுத்திருக்கிறார். அது கீழே:

நண்பர் "X"-குறிப்பிட்ட அந்த விலங்கினம் ஒரு 'Insects' (பூச்சிகள்) வகுப்பில், 'Lepidoptera' (செதில் சிறகுகள்) வரிசையில், 'Crepusculariae' (அந்திப்பூச்சிகள்) குடும்பத்தில் உள்ள சாவுத்தலை அடையாளம் உடைய 'Spinks' என்ற பூச்சிதான் அது!

அவ்வளவு பெரிய பூச்சியா? இல்லை! (ரோ.3:3) உண்மையில் அது வண்ணத்துப் பூச்சி ('Butterfly') அளவுடையதுதான்! "இதோ, நீ காட்டிய பிராணி" என்று ஜன்னலின் மேல் பகுதியில் ஒரு எட்டுக்கால்பூச்சியின் வலைக்குள் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த விசித்திர ஜந்துவை சுட்டிக் காட்டி விவரித்தார்.

நண்பர் "X"- நினைத்தது போல அது அவ்வளவு பெரியதாகவோ, அவ்வளவு தூரத்திலோ இல்லை! ஒலி எழுப்பக் கூடிய மிகச் சில வண்ணத்துப்பூச்சி வகைகளில் இதுவும் ஒன்று. இது எழுப்பும் கீச்சொலியை பல மீட்டருக்கு அப்பால் இருந்து கூட கேட்க முடியும். கேட்டவர் இதன் ஒலி மிக தொலைவில் இருந்து வந்ததாக நினைத்தார். அதனால்தான் அது அவருக்கு கடூர கூச்சலாக கேட்டிருக்கிறது. உருவத்தையும் மிக தொலைவில் இருப்பதாக அவர் நினைத்ததால்தான் இராட்சதத்தனமாக தெரிந்திருக்கிறது.

அவருக்கு ஏன் இவ்விதமாக தோன்றியது? இயற்கையாகவே நம் கண்களுக்கு 'Stereoscopic Image' உண்டு. அதனால் ஏற்பட்ட ஒரு "ஒளியியல் மாயத் தோற்றம்"தான் இதற்குக் காரணம்.

இனிமேல் விஷயத்துக்கு வருவோம். சாத்தானும் இவ்விதமான ஒரு ஆவிக்குரிய "ஒளியியல் மாயத் தோற்றத்தைதான்" கொண்டு வந்து நம் பொருளாதார பிரச்சனையை பெரிதாக்கிக் காட்டுகிறான். உண்மையில் வாக்குத்தத்த கிறிஸ்தவர்களுக்கு அது "பூச்சி" போன்ற சின்ன விவகாரம்தான்! வாக்குத்தத்த கதவுகளுக்கு வெளியே நிற்கும்போதுதான் நிலைமை சாத்தானால் இப்படி விபரீதமான முறையில் பெரிதாக்கப்படுகிறது! அதை நிஜம் என்று நினைக்கும் அளவுக்கு ஆவிக்குரிய கண்களில் குறைபாடுகளை சாத்தான் உருவாக்கிவிடுகிறான். எபிரேயர். 4:2-ஐ வாசிப்போம். அவிசுவாசம் நீங்க இயேசு கிறிஸ்துவை வர விடுவோம். (மாற்கு. 9:24) பணப்பிரச்சனை சின்னதுதான்! சிலந்திப்பூச்சியின் கூடும் மெல்லிசானது தான், அறுத்துவிட்டு வெளியே வருவோம்!!

## பொருளாசை அவசரப்படுகிறது:

"பண ஆசை" வாக்குத்தத்த ஆசீர்வாதங்களுக்கு எதிரிடையானது. இது தேவனின் வாக்குத்தத்தங்களுக்கு எதிராக செயல்பட்டு அழிவை நோக்கி பாதை போடுகிறது. நீதி. 28:22ல் "வன் கண்ணன் செல்வந்தனாகிறதற்கு பதறுகிறான், வறுமை தனக்கு வருமென்று அறியாமலிருக்கிறான்" என்ற வேத எச்சரிப்பை நினைவில் கொள்வோம். "பதறுவது" அவிசுவாசத்தின் பிரதிபலிப்பு, "விசுவாசிக்கிறவன் பதறான்" என்றுதான் வேதம் சொல்கிறது. அவிசுவாசம் தேவனை நம்பாது, அதனால் வாக்குத்தத்த கதவுகள் அடைக்கப்படுகிறது. பிறகென்ன, வறுமைதான் மீதமிருக்கும்.

1. உலக பண ஆசை, உயிருக்கே உலை வைக்கிறது. சொத்துக்காக சகோதரனையே, தந்தையையே கொலை செய்யும் செய்திகள் செய்தித்தாள்களில் மிக சாதாரணம். (நீதி. 28:16)
2. இதனால் வீட்டுக்குள் குழப்பங்கள் உருவாகி துண்டாடப்படுகிறது. (நீதி. 15:27)
3. பொருளாசையை வேதம் "அக்கிரமம்" என்று எச்சரிக்கிறது, தேவனுடைய கரத்தால் அடிவாங்க வேண்டியதிருக்கும் விளைவை கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது. (ஏசா. 57:17)
4. நாம் தேவ பணிகளுக்கென்று உண்மையாய் கொடுக்கும் காணிக்கை களும் இதனால் பாதிக்கப்பட்டு விளைச்சலை இழக்கின்றன. (எரே.8:10)

5. மிகப் பயங்கரம் என்னவென்றால், நம்மை உண்டாக்கின நம் தேவாதி தேவனையே மறந்து போவோம். (எசே. 22:12)

6. வசனத்திற்குக் கீழ்ப்படிய விடாமல் செய்யும். (எசே. 33:31)

7. மிக மிக முக்கியமானது என்னவென்றால் பரலோகமே போக முடியாதபடி வழியை அடைத்துக் கொண்டு நிற்கும். (எபே. 5:5)

8. தேவனுக்கு முன்பாக வேஷம் போட வைக்கும். (1தெச. 2:5)

9. தந்திரமுள்ளது, இது சாத்தானுடைய முக்கியமான குணாதிசயமான "நரித்தனமானது". (2 பேதுரு. 2:3)

10. சாபத்தைக் கொண்டு வரும். (2 பேதுரு. 2:14)

11. சபையில் பொருளாசைக்காரர்கள் யாராவது இருந்தால் அவர்களுடனான தொடர்பை துண்டிக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த பாவம் நம்மையும் பற்றிப் பிடித்து மேற்கூறப்பட்ட கேடுகளுக்குள்ளாக இழுத்துக் கொண்டு போகும். (1 கொரி. 5:11)

தேவனுடைய ஆசீர்வாத முறைகள் நிதானமானவை. படிப்படியாக உயர்வைத் தருபவை. அப்படி நாம் சுதந்தரிக்கும் பணம், பண ஆசையை விதைக்காது. நம்மை கேட்டில் தள்ளவும் தள்ளாது. அதனால் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களைப் பற்றின அநாவசியமான பயம் தேவையில்லாதது. மேலே வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் 11 காரியங்களுக்கும் எதிரிடையானது. நன்மையானதையே கொண்டு வரும்.

"பாலைவன நீரோடைகள்" என்ற தின தியான நூலில் ஒருவர் தன்னுடைய "பட்டுப்பூச்சி வளர்ப்பு" அனுபவத்தை எழுதி அதை ஒரு ஆவிக்குரிய கருத்துடன் ஒப்பிட்டிருந்தார். அந்த தியான நூலின் "விதைப்பகுதியே" துன்பம்தான். "துன்பத்தின் வழியாகத் தான் மனிதர்கள் பரலோகவாசிகளாக உருவாக்கப் படுகிறார்கள்" என்ற சத்தியத்தின் அடிப்படையிலேயே வருஷத்திற்கான 366 நாட்களுக்குமான தியானக்குறிப்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அந்த உதாரணத்தின் விரிவாக்கத்தைப் பார்க்கும்போது, வறுமையை தேவன் அனுமதித்திருக்கிறார் என்ற உண்மை விளக்கமாக புரியும்.

பட்டுப்பூச்சி வளர்ப்பு கலையை **habit** ஆக வைத்திருந்த அந்த நபர் ஆர்வத்துடன் பூச்சியின் **Life cycling**-ஐ கூர்ந்து கவனித்து வந்தார். **"Pupae"** பருவம் கடந்த பிறகு ஒரு பட்டுப்பூச்சி கூட்டிலிருந்து வெளிவருவதற்காக, ஒரு பகல் முழுவதுமாக போராடிக் கொண்டு, அதிக பிரயத்தனம் எடுத்துக் கொண்டிருந்தது. கவனித்துக் கொண்டிருந்த இரக்க மனதுடைய அதன் வளர்ப்பாளர் "குளிர் காலமானதால் கூட்டின் நார்பகுதிகள் இறுக்கமாகி வெளியேற கஷ்டப்படுகிறது" என்று தப்பர்த்தம் செய்துக் கொண்டார். ஒரு பிளேடினால் கூட்டின் வாய்ப்பகுதியை இலேசாக அறுத்து பெரிதாக்கினார். பட்டுப் பூச்சியும் உடனடியாக மிக எளிதாக வெளியே வந்துவிட்டது. ஆனால் அதன் உருவத்தைப் பார்த்து அதிர்ந்துப் போனார். அவருக்கு அப்போதுதான், தான் செய்தது தவறு என்பது உறைத்தது.

அப்படி அந்த பட்டுப் பூச்சிக்கு என்னதான் நடந்து விட்டது? அதன் உடல் பகுதி அது பட்டுப்புழுவாக இருந்தபோது இருந்த அளவில் தடிமனாக காணப்பட்டது. இறக்கைகள் நான்கும் பூரண வளர்ச்சியடையாமல் மிகச் சிறியதாகவும், நிறங்கள் மங்கலாகவும் இருந்தது. தான் செய்த மதியீனமான காரியத்தை நினைத்து அதன் எஜமானர் மிக வருந்தினார். அந்த வண்ணத்துப் பூச்சியின் சிருஷ்டிகரை விட தான் அதற்கு மேன்மையான காரியத்தை செய்து விட முடியும் என்று அவர் தனது அறியாமையினால் நினைத்து விட்டதுதான் இத்தகைய விபரீதத்திற்கு வித்திட்டு விட்டது.

சரி, அவர் கூட்டின் வாய்ப்பகுதியை அறுத்து விட்டதில் என்ன தவறு? அந்த பட்டுப்பூச்சிக்கு ஏன் அசம்பாவிதம் நடந்தது? தேவனுடைய சிருஷ்டிப்பில் எவ்வித தவறும் இருக்க முடியாது. கூட்டின் வாய்ப்பகுதி சிறியதாக இருந்தால்தான் பூச்சி

வெளியே வரும் போது, அதன் உடல் பகுதி அழுத்தப்பட்டு அதன் சத்துபொருட்கள் இறக்கைகளுக்கு அனுப்பப்படும். இறக்கைகள் மெருகேற்றப்படும். அப்போது இறக்கைகள் நான்கும் நன்கு வளர்ந்து, அழகான வண்ணங்களுடன் காணப்படும், பறப்பதற்கான சத்துவமும் இறக்கைகளுக்கு கிடைக்கும். ஆனால்... அந்தோ பரிதாபம்! இறக்கைகளுக்கு கனமான உடலை சுமக்கும் பலமில்லாத காரணத்தினால் அந்த பரிதாபகரமான பூச்சி, தான் ஆனந்தமாக பறந்து திரிய வேண்டிய வானத்தைக் கண்களால் பார்க்கக் கூட முடியாமல், தன் சொற்பமான ஆயுள் பகுதியில் தரையிலேயே ஊர்ந்து திரிந்தது.

நம்மையும் தேவன் பிரச்சனைகளுக்குள் சிக்கவைத்து, பிறகு சிக்கறுத்து வெளியே வருவதற்கு விட்டு விடுகிறார். "நான் உபத்திரவப்பட்டது நல்லது, அதனால் உம்முடைய பிரமாணங்களைக் கற்றுக் கொண்டேன்" என்று தாவீது பாடுகிறான்! தெய்வத்துவத்தின் இரகசியங்கள் உள்ளடக்கிய ஆழமான கருத்துக்கள் கொண்ட ஒரு பாடல் தொகுப்பை இயற்றிய ஒரு கவிஞன் சொல்லுகிறார்: "அந்த பாடல்களை எல்லாம் துன்பம் என் இருதயத்தை அழுத்திய போது அதை இறக்கி வைக்க வகை தெரியாமல் மொட்டை மாடிக்குச் சென்று கறுப்பு வானத்தை உற்று நோக்கியபடி தான் எழுதியவை"!

மனித வாழ்வில் சம்பவிக்கும் அநேகமாயிரம் துன்பங்களின் ஒரு பகுதிதான் வறுமை. இதை தேவன் நம் வாழ்க்கையில் அனுமதிக்காமலேயே நமக்கு ஐசுவரியத்தையும் சம்பத்தையும் அள்ளிக் கொடுத்திருந்தால், அந்த அழகற்றுப்போன குட்டை இறகு வண்ணத்துப் பூச்சியின் நிலைமையில் தான் நம் ஆவிக்குரிய உள்ளான மனிதன் இருந்திருப்பான். உன்னதங்களில் தேவனுடன் உலாவும் பாக்கியத்தை இழந்திருப்போம்.

இப்போதோ, மனிதக் கண்களுக்கு தெரியாத உன்னத சிறகுகளை உபத்திரவத்தின் மூலமாக தேவனிடமிருந்து பெற்றோம். அந்த பட்டுப்பூச்சியைப் போல சிக்கித் திணறும் போதுதான், அந்த சிறகுகள் முளைப்பதற்கான சத்துவம் (சத்து) நமக்குக் கிடைத்தது.

நம் வறுமையே நமக்கு ஐசுவரியத்தை தந்தது, அல்லேலூயா!

## ஆகாயப் பட்சிகளைக் கவனித்துப் பார்த்தால்...

மத்.6:24-33-ல் பறவைகள் விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, அவைகளுக்கும் தேவன் பிழைப்பூட்டுகிறார்தானே. அதனால் விதைக்க வேண்டியதில்லை என்பதாகத்தான் மேலோட்டமாகப் பார்த்தால் அர்த்தம் புரியும். பிழைக்கத்தானே செய்கின்றன? நியாயமான கேள்வி போல் தோன்றினாலும் உண்மையில் இந்த கேள்வியில் நியாயமில்லை!

பதில் என்னவென்றால், நாமும் முன்பு விதைக்காமல்தான் இருந்தோம், என்றாலும் பிழைக்கத்தானே செய்தோம்? செத்துப் போய்விடவில்லையே! அப்படிதான் இதுவும். ஆனால் "இதுவும் ஒரு பொழைப்பா? என்று அலுத்துக் கொண்டது மறந்து போச்சா? வறுமையடைவதால் தேவனை தூஷிக்க வேண்டிய சூழ்நிலைக்குள்ளாய் தள்ளப்படலாம் என்பதை நீதி. 30:9ல் பார்க்கிறோம். பறவைகளுக்கென்றொரு இலக்கும், குறிக்கோளும், கிடையாது. நிகழ்காலத்திற்காக மட்டும் வாழும்படியாகவும், அடுத்த நாளைக் குறித்துக் கவலைப் படாத அளவிற்குமாக அதனை வடிவமைத்திருக்கிறார் இயேசு.

ஆனால் பறவைகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய நம் நிலைமை அப்படி அமைக்கப்படவில்லையே! விதைக்காவிட்டாலும் தேவன் தன் பிள்ளைகளை பட்டினி போடுவதில்லைதான், என்றாலும்...

ஒரு உதாரணம்: விவசாயத்தை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கும் கிராமப்புறங்களில் ஒரு சில ஏழை மக்கள் தங்களுக்கென்று விளைநிலங்கள் இல்லாத காரணத்தினால் விதைக்காமல்தான் இருக்கிறார்கள். என்றாலும் அவர்கள் வாழ்ந்து

கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று ஓலைக்குடிசையில், கயிற்றுக் கட்டில், கஞ்சிக்கலயம் சகிதம் வாழத்தான் செய்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை போதுமென்று அவர்கள் நினைப்பதில்லை. தங்களுக்கு ஒரு நல்ல காலம் தோன்றாதா? என்ற ஏக்கத்துடன்தான் அப்படி வாழ்கிறார்கள்.

விதைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஏனோ தானோ என்று வாழும் விசுவாசிகள் தங்கள் வாழ்க்கை முழுவதுமாக பற்றாக் குறைகளோடும், தரித்திர பிசாசோடும் போராடியே ஒரு வழியாகி விடுகிறார்கள்.

அலுத்து, சலித்து, விரக்தியின் கரை தட்டி, நுரை தள்ளி... கடைசியில் வாழ்க்கை படகே உடையவும் வாய்ப்புண்டாகி விடுகிறது. பரிசுத்தாவியானவர் வாழும் ஆலயமாகிய சரீரம் பலவீனப்பட்டுப் போவதால், ஊழியமும் செய்ய முடியாமல் போகிறது. உள்ளான மனுஷனின் வளர்ச்சியும் போதிய விசுவாசமில்லாததினால் மெலிந்து, ஒளியிழந்த கண்கள் தரிசனத்தையும் இழந்து போகிறது.

பறவைகளை விட விசேஷித்த சிருஷ்டிகளான நாம், அவைகளை விட சிறப்பானவர்களாக வாழ்ந்து, அவைகள் செய்யாத “விதைப்பும் அறுப்பும்” என்ற ஆசீர்வாத யுக்தியை நாம் கையாள வேண்டும் என்று தேவன் விரும்புவதில் என்ன தவறு இருக்கிறது? விதைக்காத பறவைகளையே தேவன் போஷிக்கும் போது, விதைக்கும் நம்மை அதிகமதிகமாக ஆசீர்வதித்து, போஷித்து, நடத்த மாட்டாரா? என்பதுதான் அந்த வசனத்தின் மெய்யான அர்த்தம்.

“தேவனுடைய இராஜ்யத்திற்கும், நீதிக்கும் அடுத்த காரியங்களை” கவனிக்கச் சொல்கிறார். தேவ இராஜ்ஜியம் கட்டப்படுவதற்காக முழு மூச்சுடன் சுவிசேஷ வேலைகளை செய்து, அதற்கான செலவுகளை காணிக்கையாக கொடுத்து (விதைத்து), ஜெபித்தால் நீதியின் விளைச்சலை தருவதாக வாக்களிக்கிறார்!

அடுத்ததாக பறவைகள் “களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை” என்று பார்க்கிறோம். அவைகள் சேமிப்பதில்லை, கிடைப்பதை சாப்பிட்டு விட்டு, மீதியை அங்கேயே போட்டு விட்டு பறந்து போய் விடும். இவ்விதமாக தன்னைக் குறித்து அக்கரையற்றிருக்கும் பறவைகளையே தேவன் பிழைப்பூட்டும் போது, நம்மை? யோசேப்பை பஞ்ச காலத்திற்காக தேவன் சேமிக்கச் சொன்னார். (ஆதி.41) சேமிப்பதும் விதைப்பதைப் போலவே நாம் நிறைவேற்ற வேண்டிய தேவ பிரமாணங்களில் ஒன்றுதான். 20% சேமிக்கும் போது தேவ இராஜ்ஜியத்திற்காக விதைப்பதும் எளிதாக இருக்கும்.

அந்த பட்டியலில் “உழைப்பு”ம் சேரும். காட்டுப் பூக்கள் “உழைப்பதுமில்லை, நூற்கிறதுமில்லை” என்றாலும் சாலமோன் ராஜா வைத்திருந்த உடைகளை விட அழகான உடைகளை அவைகளுக்கு கொடுத்திருக்கும் நம் தேவன்; பவுல் அப்போஸ்தலனைப் போல பிழைப்புக்காக வேலை செய்து உழைக்கும் தேவ பிள்ளைகளை ஆசீர்வதிக்க மாட்டாரா என்ன? உழைக்கும் போது நம் வருமானம் அதிகரிக்கும், அதிகமாக விதைக்கவும் அது ஏதுகரமாகும்.

## உந்தன் சுயமதியே நெறியென்று உகந்து சாயாதே!

அழகான பழைய பாடல்! தங்களுடைய பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்ள உலகத்தாரின் வழிகளை தெரிந்துக் கொள்ளும் தேவ பிள்ளைகளுக்கு ஏசாயா 50:10,11ல் இருந்து தேவனுடைய எச்சரிப்பின் குரல் கேட்கிறது. புதைகுழியில் மாட்டிக் கொண்ட ஒருவன் தானாகவே வெளியே வர முயற்சிப்பதைப் போன்றது தான் இதுவும். பரிசுத்தாவியானவரின் ஆலோசனையுடன் வெளியேற முயற்சிப்பதுதான் புத்திசாலித்தனம்.

வேத வசனங்கள் **“Head Light”** போல காட்டுக்குள் செல்லும் ஒருவனுக்கு இருளைக் கடந்துச் செல்ல வழிகாட்டுகிறது. (யோபு 29:3)

நம் பரலோக பயணத்திற்கு இடையூறு உண்டாகாதபடி அழைத்துச் செல்கின்றன. ஆனால் உலக பொருளாதார நிபுணர்களின் நூதன ஆலோசனைகள், சொரி மணலுக்கு வழி நடத்தும் காட்டுத் தீபங்களாகும்!

கோடிக் கணக்கான பணத்தை எளிதாக சம்பாதிக்கும் திரைப்பட நடிகைகளின் "தற்கொலை நிகழ்வுகளை" இதற்கு நல்ல உதாரணமாகக் காட்டலாம். அவர்களுடைய ஐசுவரியம் அவர்களை திருப்திப் படுத்தாமல் போனதற்கு என்ன காரணம்? அவர்கள் பணம் சம்பாதிக்க கர்த்தருடைய வழிகளை தெரிந்து கொள்ளாதது மட்டுமல்ல, சாத்தானுடைய வழிகளை தெரிந்துக் கொண்டது தான் காரணம்.

அடுத்ததாக, நம் சுய முயற்சிகள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை செயலிழக்கச் செய்கின்றன. காரணம் அவ்விதமாக முயற்சிகள் எடுக்கும் போது வாக்குத்தத்தக் கட்டளைகளுக்கு எதிர்மறையான காரியங்களைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறோம். "விதைக்க வேண்டும்" என்ற வாக்குத்தத்தத்துக்கு விரோதமாக செயல்படுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் விதைக்காமலேயே பெரிய அளவில் பணம் சம்பாதிக்க ஒரு வழி "லஞ்சம்" வாங்குவது. ஒரு 10,000 ரூபாய் லஞ்சம் வாங்க சம்பந்தப்பட்ட நபரிடம் குறைந்த பட்சம் பத்துப் பொய்களையாவது சொல்லி, ஏமாற்றி, இதற்கு உதவி செய்த நண்பருக்கு அதிலிருந்து ஒரு பகுதியை லஞ்சமாக கொடுத்து அவரிடமும் ஒரு மூன்று பொய்களை சொல்லி ஏமாற்றி... இதுவே ஒரு லட்சம் ரூபாயாக இருந்தால் பொய்களின் அளவை இன்னும் அதிகமாக்க வேண்டியதாயிருக்கும். இப்படியாக நம் சுயமுயற்சியிலான பணம் சம்பாதிக்கும் முறை பல பாவங்களுக்குள் நம்மை ஊடுருவும்படி செய்து நம்மை வஞ்சிக்கிறது. குற்றவுணர்வை உருவாக்கும் மனசாட்சியை நாம் தட்டிக் கொடுத்து சமாளிக்க முயற்சியெடுப்போம். இது பரிசுத்தாவியானவரை துக்கப்படுத்துகிறது. இதனால் அபிஷேகத்திற்கே ஆபத்து. "இதெல்லாம் ஒரு தப்பா என்ன?" என்ற சாத்தான் ஓதும் வேதத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து விடும். பிறகு மனசாட்சி மரத்துப் போய் விடும். இப்படிப்பட்டவர்களை "மனசாட்சியினால் சூடுண்ட பொய்யர்கள்" என்று வேதம் அழைக்கிறது. (1தீமோத். 4:1.) அதாவது பரிசுத்தாவியானவர் எச்சரிப்புக் கொடுப்பதை நிறுத்தி விடுவார்.

இவ்வளவு ஆபத்துக்களுக்கிடையில் சுய, உலக வழிகளில் பணம் சம்பாதிப்பதை விட தரித்திரமே மேல்! நம் பரலோக பாக்கியத்தையாவது காப்பாற்றிக் கொள்ளலாம். ஒரு ரோஜா மலரை கட்டாயப்படுத்தி மலர வைக்கலாம், ஆனால் அதன் அழகும் வாசமும் காணாமல் போய் விடும்.

## குறுக்குப் பாதை உண்டா ?

"இல்லை" என்பதுதான் ஒரே பதில். தேவனுக்கு காணிக்கை கொடுக்காமல், ஆசீர்வாதத்தை மட்டும் எதிர்பார்ப்பது கிரியையில்லாத விசுவாசம். கிரியையில்லாத விசுவாசம் செத்தது. விதைப்பு இல்லாத நிலம் மாயையை பிறப்பிக்கும். விதைக்கும் போது நமது விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்கிறோம், விசுவாசம் வலிமையடைகிறது.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாத காரியம்" என்று வேத வசனம் சொல்லியிருக்க, விதைக்காமலேயே அறுவடையை எதிர்பார்ப்பவர்கள் தாங்கள் தேவனிடம் அன்பு கூறுவதாகவும், அவர் தங்களை அன்பு செய்வதாகவும் சொல்லிக் கொள்வது வெறும் பேச்சாகத்தானே இருக்க முடியும்?

காணிக்கை கொடுக்காமலேயே ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள கண்டிப்பாக வேதத்தில் இரகசிய வாக்குத்தத்த வசனங்கள் இருக்கும் என்று நானும் முற்காலங்களில் தேடிப் பார்த்ததுண்டு. ஆயிரக்கணக்கான ஆசீர்வாத வாக்குத்தத்தங்களின் கட்டளைப் பகுதியினுள்ளும் நிச்சயமாக விதைகளைத்தான் பார்க்க முடியும். "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" என்ற வசனத்தின்படி உத்தமமாய் நடந்தால் போதும் தேவன் நன்மையானதை (ஆசீர்வாதத்தை) தருவார் என்று அர்த்தம்

எடுத்துக் கொள்ளலாம். ஆனால் எது உத்தமம் என்பதுதான் கேள்வி. “உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்” என்ற வசனத்தை அறிந்திருந்தும் அதற்கு கீழ்ப்படியாமல் கொடுக்காமல் இருப்பவனை எப்படி உத்தமன் என்று சொல்ல முடியும்? தேவனுக்குக் கீழ்ப்படியாதவன் (கொடுக்காமல் அதாவது விதைக்காமல்) உத்தமனல்ல, அதனால் தேவன் வாக்களித்தபடி நன்மையானதை வழங்க மாட்டார், வழங்கவும் முடியாது.

அதாவது வாக்குத்தத்தம் வேலை செய்யாது, அதனால் ஆசீர்வாதமும் கிடைக்காது. இப்படி ஒவ்வொரு வசனத்திற்காக விளக்கம் சொல்லிக் கொண்டே போகலாம், முடிவே வராது.

அடுத்ததாக “நீதிமானுடைய சிரசின்மேல் ஆசீர்வாதங்கள் தங்கும்... நீதி.10:6”-ன் படி நீதிமான் என்கிற பெயர் பெற்றிருந்தால் மட்டும் போதாது, நீதிமானாக நடந்து காட்டும் போது ஆசீர்வாதம் இறங்கும். அதாவது தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து விதைக்கும்போது. “...தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்கள் நன்றாயிருப்பார்கள்... (பிர.8:12)” அதென்னவென்றால், தேவனுக்கு பயந்திருக்கவேண்டும். அதாவது அவரது கட்டளைகளை கைக்கொள்ள வேண்டும். அதாவது **Vice Versa., ...**

## மின்னல்களை கவனித்திருப்போம்:

வாக்குத்தத்த வசனங்களை வாசித்து, தியானித்தும், அதன் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய முயற்சி, செய்து ஒரு சில காரியங்களில் வெற்றி பெற்றும், கிரியைகள் ஆரம்பித்திருந்தும் இன்னும் ஆசீர்வதிக்கப்படவில்லையே, ஏன்? என்பது போன்ற கேள்விகள் விசுவாசிகளை வாட்டியெடுப்பதுமுண்டு. அவர்களுக்கு யோசுவா.1:8 பதில் தருகிறது. “... இதில் எழுதியிருக்கிறவை களின்படியெல்லாம் நீ செய்ய கவனமாய் இருக்கும்படி, இரவும் பகலும் அதை (வேதத்தை) தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், ...புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்.”

அப்படி மிகக் கவனமாக வேத வசனங்களை தியானித்து வரும்போது. சில அபூர்வ மின்னல் காட்சிகளைப் பார்க்க முடியும். இரவு நேரத்தில் மக்கள் நெரிசல் அதிகமாயிருக்கும் ஒரு பேருந்து நிலையத்தின் பக்கமாக நடந்துப் போய்க் கொண்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அந்த நேரத்தில் ஒரு மின்னல் வெட்டுகிறது, கூர்ந்து பார்த்தால் சுற்றியுள்ள எல்லாமே (எல்லோருமே) அப்படியே ஒரு வினாடி இயக்கமின்றி நின்றிருப்பதாகத் தோன்றும். அசைவில்லாமல் மனிதர்கள் சிலைகளாகி விட்டதுபோல தோன்றும். ஓடிக் கொண்டிருக்கும் வண்டிச் சக்கரங்களின் ஆரங்களைக் கூட தெளிவாகப் பார்க்க முடியும்! இது எப்படி சாத்தியமாகிறது?

மின்னல் வெட்டும் நேரம் 1 வினாடியில் 1000-ல் ஒரு பங்குதான்! (50/1000 வினாடி என்று வைத்துக் கொள்வோம்). இக்குறுகிய நேரக் கட்டத்தில் எதுவுமே கவனிக்கத்தக்க அளவிற்கு நகருவதில்லை. 50/1000 வினாடி பொழுதில் நிகழ்வதையே பார்க்கிறோம். இந்த சின்ன நேரத்தில் ஒரு வண்டியின் சக்கரம் 1 மில்லி மீட்டரில் ஒரு சில அளவுக்கே நகருகிறது. இதை கவனிக்க முடியாது. அதுமட்டுமல்ல, நம் விழித்திரையில் விழும் பிம்பம் 8/60 வினாடிகள் அப்படியே நீடித்திருப்பதால் இக்காட்சி இன்னும் வலுப்பெறுகிறது.

வேத வசனங்களை ஆழ்ந்து தியானித்துக் கொண்டிருக்கும் போது, பரிசுத்தாவியானவர் மின்னல்களை உருவாக்கி, நம் ஆவிக்குரிய கண்கள் வழியாக அவற்றை கவனிக்கும்படி செய்வார். எப்படி மின்னல் அடிக்கும் போது, வண்டிச்சக்கரம் நகராமல் நிற்பது போலத் தோன்றுகிறதோ, அப்படியே வசன ஓட்டத்தை குறிப்பிட்ட இரகசியம் இருக்கும் இடத்தில் நிற்கும்படி செய்து, நாம் அதை கூர்ந்து கவனித்து தோண்டியெடுக்கும்படிச் செய்வார். அந்த நேரத்தில் நாம் நிறுத்தி, நிதானிக்கவும் முடியும்.

மிகச் சிறிய அளவிலான "விதை"களை இப்படிப் பட்ட பரிசுத்தாவியானவர் தந்த மின்னல் வெட்டு அனுபவங்களின் மூலமாகத்தான், என்னால் கண்டு பிடிக்க முடிந்தது.

மின்னலுக்கு பின் மழை என்பது இயற்கை நியதி. ஆவிக்குரிய நியதியும் அதுதான். விதைத்து காத்திருப்போம், மழை வருவது நிச்சயம். விளைச்சல் அதி நிச்சயம்.

## பார்வைக் கோணம் எத்தனை டிகிரி?

நாம் பண நெருக்கடியில் மாட்டிக் கொள்ளும் போது, "தன்னை மட்டுமே" நோக்கிப் பார்க்க வேண்டுமென்பதே தேவனுடைய எதிர்பார்ப்பு. (எரே.33:3) தன் பிள்ளைகள் அவசர நேரத்தில் தன்னை மட்டுமே எதிர்பார்க்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதில் அதிகப் படியான நியாயம் இருக்கிறது. நம் தேவனைத் தவிர முக்கியமான ஒருவர் நமக்கு இருக்க வாய்ப்பே இல்லை. என்றாலும் பொருளாதார நெருக்கடியில் மாட்டிக் கொள்ளும்போது நன்றாக வளர்ந்த ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் கூட முதலில் தேவனை நோக்கிப் பார்ப்பதில்லை, அந்த எண்ணம் கூட வருவதில்லை. உடனடியாக உதவி செய்யக்கூடிய நண்பர்களையோ, உறவினர்களையோ, உடன் வேலையாட்களையோ சுற்றிச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்துவிடுகிறார்களே, நம் ஆவிக்குரிய பார்வைக் கோணம் எந்த அளவில் இருக்கிறது?

மனிதனின் பார்வை 120 டிகிரி வரை காணக்கூடிய ஆற்றல் வாய்ந்தது. ஆனால் முயலுடைய பார்வைக் கோணம் 180 டிகிரி வரை பார்க்கக் கூடிய ஆற்றலுள்ளதாக இருக்கிறது. அதனால்தான் அதற்கு தனக்கு பின்புறமாக உள்ளவைகளையும் பார்க்க முடிகிறது, துரத்தி வரும் எதிரியிடமிருந்து எளிதாக தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் விதமாக விரைவாக ஓடவும் முடிகிறது.

எல்லாம் நிறைவாக இருக்கும் போது தேவனை நம்புவது எளிதாக இருக்கிறது. அவரை நோக்கிப் பார்ப்பது, ஆராதிப்பது, ஜெபிப்பது என்று 120 டிகிரிக்குள்ளாக நம் பார்வை மிஞ்சிப் போகாமல் பார்த்துக் கொள்கிறோம். ஆனால் பணமில்லாமல் கையைப் பிசையக்கூடிய நேரம் வரும் போது விசுவாசிகளின் பார்வை முயல் பார்வையாகி விடுவதுதான் விபரீதம். ஆனால் இந்த விபரீதத்தை யாரும் உணர்வதேயில்லை. 180 டிகிரிக்கு விரிக்கப்பட்ட அவிசுவாசப் பார்வை உலக மனிதர்களைப் போல மாற்று வழிகளை தேடி அலைபாய்கிறது. தேவன் மேலிருந்த பார்வை நழுவி, முயலைப் போல தறிகெட்டு ஓட ஆரம்பிக்கிறது. பின்புறத்தில் எதிரி தொடர்வதைப் பார்த்துவிடும் முயல் திக்குத் தெரியாமல் ஓடி, எங்காவது ஒரு புதருக்குள் போய் மறைகிறது. இப்படிப்பட்ட ஓட்டத்தால் தரிசனம் ஆபத்துக்குள்ளாகிறது.

தரிசனமிழந்தவனின் விசுவாச ஓட்டப் பாதையில் எல்லைக் கோடு இல்லாமல் போவதால் இலக்கு இல்லாத அர்த்தமற்ற ஓட்டமாக அது முடிகிறது.

இப்படிப்பட்ட பார்வைக் கோணங்களால் லோத்தின் மனைவியைப் போல பின்நோக்கிப் பார்க்கும் சூழ்நிலைகளும் வரலாம். அந்த பரிதாப நிலை ஏற்படாமல் தடுக்க தேவனை மட்டுமே நோக்கிப் பார்க்கக் கூடிய பார்வைக் கோணத்தை அப்பியாசப்படுத்துவோம்.

அப்பொழுது இதுவரை நாம் அறியாதிருந்ததும், எட்டாததுமாக இருந்த பெரிய காரியங்கள் நமது தேவனால் நமக்கு கற்றுத் தரப்படும். (எரே.33:3) பரலோக இரகசியங்கள் புலப்படும். அந்த இரகசியம்? "விதை"தான்!

## தெய்வத்துவத்தின் பரிபூரணமே விதையில்தான்!

பரலோக இராஜ்ஜியமே "கடுகு விதை"க்குத்தான் ஒப்பனையாக சொல்லப்பட்டிருக்கிறது. (மத்.13:31,32) நாம் இரட்சிக்கப்படும்போது அது நமக்குள்ளாக விதைக்கப்படுகிறது. நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து பரிபூரணத்தை அடைவதற்கேதுவாக அது வளர்ந்து கொண்டே இருக்கிறது. முடிவில் அது உலகத்திற்கே ஆசீர்வாசமாக இருக்கும் விதமாக பெரிய மரமாகிறது. வளர்ந்த மரம்தான் கண்களுக்குத் தெரிகிறதே

தவிர, அதன் வளர்ச்சியின் ஆரம்ப கரு எங்கே இருந்தது என்பதை யாரும் யோசிப்பதில்லை. அதைப் போலவே பரலோக இராஜ்ஜியமும் இருக்கிறது. காணாமல் விசுவாசிக்கும் தேவ பிள்ளைகள் அந்த கடுகு விதையை காண்கிறார்கள். வேத வசனங்களை “கோதுமை விதை” என்றும் வேதம் சொல்கிறது.

சுவிசேஷம் அறிவிக்கப்படும்போது அது தெளிக்கப்படுகிறது. இக்காலங்களில் செயற்கைக் கோள் மூலமாக பாறை, முட்கள், பாதை, நல்ல நிலம் என்று எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் தூவப்படுகிறது. விதை தெளிக்கப்படும் இடத்திற்கு விரைந்தோடி வந்து தன் நல்ல நிலமாகிய இருதயத்தில் அவைகளை ஏந்திச் செல்பவன் புத்திமான்! (மத்.13:8,9)

நாம் கூட தேவ இராஜ்ஜியத்திற்கான விதைகள்தான்! அது தெரியுமா? (ஓசியா 2:23)

நாம் உலகில் உள்ள சகல ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கேதுவாக விதைக்கப்பட்டிருக்கிறோம். இதற்கு முன்பாகவும், உலக தோற்ற முதல் விதைக்கப்பட்ட தேவ பிள்ளைகளாகிய விதைகளில் இருந்துதான் நாம் துளிர்த்திருக்கிறோம். (யோ.12:24)

நம் பிதாவாகிய தேவன் தன் ஒத்தைக்கொரு மகன் என்றும் பாராமல் இயேசுவை நமக்காக விதைத்தாரே! அந்த விதைப்பின் பலனாக விளைந்த விளைச்சலை தேவன் நமக்குத் தராமல் இருப்பாரா என்ன? (ரோ.8:32)

சாத்தான் அவற்றுக்கிடையில் களையை விதைத்தான், அவையும் சுட்டெரிக்கப் படுவதற்கேதுவாக வளர்ந்துக் கொண்டிருக்கின்றன. (மத்.13:25)

## கண்ணுக்குத் தெரியாத அந்தரங்கத்தில்...

புதைக்கப்பட்ட விதை கண்ணுக்குத் தெரிவதில்லை. அப்படி தெரியாத அளவிற்குப் புதைக்கப்பட்டால் தான் நன்றாக வளரும். ஊற்றப்படும் தண்ணீரை சரியானபடி உறிஞ்சி; பூமியின் சத்துப் பொருள்களை உறிவதற்கேதுவாக ஆழமாக வேர் விட அப்பொழுதுதான் வசதியாக இருக்கும். வெளியே தெரியும்படி மண்ணின் மீது போடப்படும் விதை ஒரு inch மட்டுமே வளரும், பிறகு காய்ந்து விடும்.

அதனால்தான் தர்மம் செய்தல், காணிக்கை போடுதல் எல்லாவற்றையும் இரகசியமாகச் செய்யச் சொல்கிறார் இயேசு. நாம் நல்ல விளைச்சலைக் கண்டடைந்து, சுகித்திருக்க வேண்டும் என்பதற்காகவும், தேவப் பணிக்காக செலவிட்டு ஆத்துமாக்களின் பெயர்களை பரலோகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காகவும்தான் சொல்கிறார், கீழ்ப்படிவோம். நம்மை தேவன் விதைகளாகப் பயன்படுத்துமுன் நம்மை அதற்காக பதப்படுத்துகிறார், அதாவது தகுதிப்படுத்துகிறார். நன்றாக வெயிலில் காய வைக்கிறார் (ஓசியா. 2:3) விதையின் ஈரப்பதம் முழுவதுமாக வெயிலினால் உறிஞ்சப்படுகிறது. (ஓசியா.2:9). அவைகளை சேகரிக்கிறார் (வச.14). பிறகுதான் விதைக்கிறார். உபத்திரவங்களின் மூலமாக நம்மை பூரணப்படுத்துவதன் காரணம் இதுதான்.

## நமது கண்ணோட்டம் எப்படி இருக்கிறது ?

எலியா சாமானியமானவனே (யாக்.5:17). நம்மைப் போல சூறைச் செடியின் அடியில் படுத்துக் கிடந்தவன்தான்! என்றாலும் துன்பம் சூழ்ந்த போது அவனுடைய அவிசுவாசக் கண்ணோட்டம் உயிரிழந்தது, ஜெபத்தின் மேல் ஜெபம் பண்ணினான். “ஒன்றுமில்லை” என்று சொன்ன வேலைக்காரனின் அவிசுவாச வார்த்தைகளை மீறி அவன் விசுவாச கண்கள் பலன் கொண்டது, கையளவு மேகத்தை எழும்பச் செய்தது.

மாமிசக் கண்கள் நம் ஆசீர்வாதத்தை கெடுக்கும் விதத்தில் எதையாவது சொல்லிக் கொண்டுதான் இருக்கும். அதைக் கவனிக்காமல் தேவனுடைய வார்த்தை அதன் பரிமாணங்களை புரிந்து கொள்ளும் விசுவாசக் கண்களுக்குத்தான் வெற்றி.

“நிலா எவ்வளவு பெரிதாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று உங்கள் நண்பர்களிடம் கேட்டுப் பாருங்கள். ஒவ்வொருவருடைய பதில்களும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கும். “ஒரு பெரிய தட்டு போல,” “சிறிய கிண்ணத்தின் அளவில்,“ “ஆப்பிள் சைசில்,” “வட்ட மேஜையின் அளவிற்கு” இப்படியாக பல விதமான பதில்கள் கிடைக்கும். இன்னும் சிலர் நெல்லிக்காயின் அளவுக்குக் கூட கற்பனை செய்வார்கள்.

இப்படிப்பட்ட வித்தியாசமான கணக்கீடுகளுக்கு என்ன காரணம்? அடிமனதில் இருந்து சந்திரனின் தொலைவை வெவ்வாறாக கணக்கிடுவதுதான் காரணம். சந்திரன் ஆப்பிளின் அளவில் இருப்பதாக நினைப்பவன்; அதை வட்ட மேஜையின் அளவுடையதாக இருப்பதாக சொல்பவனைவிட சந்திரன் அருகில் இருப்பதாக நினைக்கிறான். நெல்லிக்காய் அளவிலாக இருப்பதாக சொல்பவன் மிக அருகில் இருப்பதாக நினைக்கிறான். இப்படிப்பட்ட தோற்ற அளவுகளைக் கொண்டு சந்திரன் இருக்கும் தூரத்தைக் கணக்கிட்டால், அத்தொலைவு 30 மீட்டருக்கு மேலாக இல்லை என்று அறியலாம்! சந்திரனின் தொலைவை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டு விட்டோம்!

ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாத ஒரு பெயர்க்கிறிஸ்தவன் கண்களிலும், அல்லது இரட்சிக்கப்பட்டும் மறுரூபமடையாத ஆவிக்குரிய கண்களையுடைய விசுவாசியின் பார்வையிலும் வேத வசனங்கள் இப்படித்தான் தெரிகின்றன.

வசனங்களின் மகத்துவங்களை, வல்லமைகளை புரிந்துக் கொள்ளாமல் வாசிப்பதனால் அவைகளின் இரகசியங்கள் அவர்களுக்குப் புரிவதில்லை.

நூற்றுக் கணக்கான ஆசீர்வாத வாக்குத்தத்தங்களை தியானித்த போதிலும் நிதானிக்க முடியாதவர்களாக, அதனால் பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆனால் ஒரு வானவியலாளரிடம் “சந்திரனின் தோற்ற அளவு என்ன?” என்றுக் கேட்டால், “ஆப்பிள் பழத்தின் அளவுக்கு இருக்கும்” என்று சொல்ல மாட்டார், “அரை டிகிரி” என்பார்! காரணம் அவருக்கு சந்திரன் நம் பூமியில் இருந்து 3,84,403 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது என்பது தெரியும். சந்திரனின் விட்டத்தின் இரு முனைகளில் இருந்தும் நம் கண்களுக்கு வரும் நேர் கோடுகளுக்கு இடையேயுள்ள கோணம் 1/2 டிகிரியாகும். (டிகிரி, நிமிடம், வினாடி என்னும் அளவுகளில் இது கணக்கிடப்படுகிறது)

ஆனால் அந்த விஞ்ஞானி இந்த உண்மையை ஆரம்பத்திலேயே அறிந்திருக்கவில்லை. அவரும் சிறு வயதில் நிலா “பந்து” அளவிலாக இருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் நாளாக ஆக, அவரும் வளர, படித்து முன்னேறி, காலங்களும் ஓட அவர் தேர்ச்சி பெற்றார். சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவர் கற்றதினால், **Telescope**-ல் சந்திரனை பார்த்து ஆராய்ச்சிகள் நடத்தியதினால், சந்திரனுக்கு முதன்முதலாக போய் வந்த ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரீன் முதல் இக்கால **Planetary Scientist** பலரை நேரில் சந்தித்து பேட்டி எடுத்ததினால் இந்த கேள்விக்கான சரியான பதிலை அவரால் கொடுக்க முடிந்தது.

வேதத்தை “நுனி புல் மேயும்” வழக்கம் ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது, கற்றுணர்தல் அவசியம். தேவனை அறிந்துக் கொள்ளாமல் அவர் வசனங்களுக்குள் ஒளித்து வைத்திருக்கும் “விதை”யை கண்டுபிடிக்க முடியாது. பரிசுத்தாவியானவர் வசன முத்திரையை உடைத்து இரகசியத்தை நமக்கு காட்டுவது, நம் வேத அறிவின் ஆழத்தைப் பொறுத்து இருக்கும் சங்.119:18.

எந்நாளும் **Nursery** பிள்ளைகளாய் “நிலா நிலா ஓடி வா... மலை மேல் ஏறி மல்லிகைப் பூ கொண்டு வா” என்று பாடிக்கொண்டிருந்தால் கதை நடக்காது. வளர **Higher Studies**-ம் வேண்டும். **Degree** முடிக்க வேண்டும், **Doctorate** ஆரம்பிக்கும் போது தரிசனம் நிறைவேற ஆரம்பிக்கும்.

L.K.G. பிள்ளைகளாகவே இருந்தால் தேவன் ஏற்றுக் கொள்ள மாட்டாரா? என்ற கேள்வி ஒரு பக்கம் இருக்கட்டும். எப்போதும் சில்லறைகளையே எண்ணிக் கொண்டிருந்தால், அடுத்தவருக்கு - உலகத்துக்கு ஆசீர்வாதமாக இருப்பது எப்படி? வயல் வெளி செழிப்பது எப்போது? விதைகளில்லாமல், விளைச்சல் இல்லாமல் நிலங்கள் தரிசாக கிடப்பது நம் அலட்சியப் போக்கினால் தான் என்பது தெரியுமா?

## இரட்சிப்பின் விதைகளை தூவுவோம் (?)

"வசனம்" தான் அது! வசனம் ஏந்திச் செல்லும் சுவிசேஷம் துளிர்விட தண்ணீர் பாய்ச்ச வேண்டியதாயிருக்கிறது.

அதற்கான செலவுக்கு பணம் தேவை. காணிக்கை கொடுப்பதைப் பற்றிக் கண்டிப்பாக பேசும் சுவிசேஷகர் கண்டிப்பாக கிண்டலடிக்கப்பட வேண்டியவரல்ல, கண்டிப்பாக பாராட்டப்பட வேண்டியவர். உதாரணமாக பவுல் அப்போஸ்தலன்! (1கொரி.16:1-3)

## தேவனுடைய யுத்தத்தை சேர்ந்து நடத்துவோம்...

1சாமு.17-ஆம் அதிகாரத்தில் வரும் யுத்தம், நம் ஆசீர்வாதத்தை தடை செய்யும் சாத்தானுக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தத்திற்கும் பொருந்தும். இயேசுவின் சேனை வீரர்களாய் இந்த யுத்தத்தை எப்படி நடத்துவது என்பதற்கு "தாவீது-கோலியாத்து" யுத்தம் ஒரு நல்ல முன் மாதிரி.

பொருளாதார பிரச்சனை கோலியாத்தைப் போல பூதாகரமாக நம் முன்பாக சவால் விட்டுக் கொண்டு நிற்கிறது! தங்கள் பொருளாதார பிரச்சனையை ஜெயிக்க தேவ பிள்ளைகள் போராடாமல் இல்லை. என்றாலும் சரியான யுத்த ஞானம் இல்லாததினால் ஜெயிக்க முடியாமல் போகிறது. தேவன் தரும் யுத்த ஞானத்துடன் போரை நடத்தினோமானால் (வச.25) தாவீதைப் போல் வெற்றி பெறுவது நிச்சயம்.

இங்கே யுத்தத்தை நடத்தும் சிறுவன் தாவீது எந்தவிதமான யுத்த அம்சங்களும் இல்லாத சதாரணமான சிறுவன்தான். ஆனால் அவனுக்குள் அந்த அசாதாரண தைரியம் சேனையதிபதி நம் இயேசுவிடமிருந்து வருகிறது!

பரலோகத்தில் பிதாவாகிய தேவனுடைய யுத்தங்களை நடத்தும் இயேசுவுக்கு இந்த யுத்தமா பெரிய காரியம்?

"விருத்தசேதனமில்லாத பெலிஸ்திய சாத்தானுக்கு" இரட்சிக்கப்பட்ட தேவப்பிள்ளைகளின் பெலத்தைப் பற்றி போதிய ஞானம் கிடையாது. சிங்கம், கரடி போன்ற மிருகங்களை கொன்ற தாவீது, கோலியாத்தையும் அவைகளில் ஒன்றாக கொல்வதைப் பார்க்கிறோம் (வச.26, 34-36). ஒரே ஒரு கூழாங்கல், நெற்றியடி! கோலியாத்தின் கதை முடிந்தது. "ஆசீர்வாத சூத்திரமான விதை" சாத்தானின் நெற்றிக்குள் புதையுண்டு நமக்கெதிரான வல்லமைகளை அழிக்க வல்லது. விதைப்பதன் மூலம் நாம் தேவனுக்கு கீழ்ப்படிவதால் சாத்தானுக்கு எதிர்த்து நிற்கிறோம், அப்பொழுது அவன் ஓடிப் போகிறான்.

ஆற்றோரங்களில் காணப்படும் அழகான பளபளப்பான கூழாங்கற்கள் முதலிலேயே அவ்வாறு இல்லை. ஆற்று நீரின் வேகத்தினால் பாறைகளில் மோதி, அதன் கூர் நுனிகள் மழுங்கி, காலப் போக்கில் அழகிய ரூபமெடுக்கிறது, நம் வறுமையைப் போல!

வாழ்க்கை முழுவதுமான பொருளாதார பிரச்சனையினால் அலைசடிப்பட்டதினால் உருவாக்கம் பெற்ற ஆவிக்குரிய தன்மைதான் பூரண வடிவம் பெற்று சாத்தானை ஜெயிக்கும் கூழாங்கற்களாய் உருவாகின்றன. பொருளாதாரப் பிரச்சனையை இந்த அணுகுமுறையோடு ஜெயித்து வெளியேறிய விசுவாசிகளைக் கேட்டால் சொல்வார்கள். ஆனால் அவர்கள் மிக அபூர்வமானவர்கள், தேடிக் கண்டுபிடிப்பதே கஷ்டமானதாயிருக்கிறது.

## ஆவியில் எழுப்புதல்...

நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்... புசித்தும் திருப்தியாகவில்லை... கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான். அதிகமாய் வருமென்று நீங்கள் எதிர்பார்த்திருந்தும், இதோ கொஞ்சம் கிடைத்தது. நீங்கள் அறுத்து வீட்டுக்கு கொண்டு வந்தும், நான் அதை ஊதிப் போடுகிறேன். (ஆகாய் 1:6,9).

மேலே சொல்லப்பட்ட தேவ கோபத்துக்கு காரணம் என்ன? தேவ ஜனங்களுக்குத் தான் இவைகளெல்லாம் நடக்கிறது, ஏன்?

## நில் - கவனி - செல்:

உங்கள் வழிகளை சிந்தித்து பாருங்கள் என்று... கர்த்தர் சொல்லுகிறார் (வச.7). மருத்துவர் மருந்து கொடுப்பதற்கு முன்பாக "என்ன வியாதி" என்பதைதான் முதலில் ஆராய்வார். "பிரச்சனை என்ன?" என்பதை கண்டுபிடித்தால்தான் தேவனிடமிருந்து நிவாரணத்தையும் பெற முடியும்.

இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தை கட்ட ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள்... இந்த வீடு பாழாய் கிடக்கும் போது; நீங்கள் மச்சுப் பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?... நீங்கள் எல்லோரும்...தன் தன் வீட்டிற்கு ஓடிப் போகிறீர்களே, "இதினிமித்தமே" என்று ... கர்த்தர் சொல்லுகிறார். (ஆகாய்.1:2,4,9). தேவன் காரணத்தையும் சொல்லி விட்டார்!

ஊழிய அழைப்பைப் பெற்றும் ஊழியம் செய்யாமல் இருப்பதால் தேவ கோபம் நம் எல்லைகளில்! இதற்கு என்ன செய்ய வேண்டும்? அதையும் தேவனே சொல்லித் தருகிறார்.

"நீங்கள் மலையின் மேல் ஏறிப் போய் மரங்களை வெட்டிக் கொண்டு வந்து, ஆலயத்தை கட்டுங்கள்; அதன் மேல் நான் பிரியமாயிருப்பேன், அதனால் என் மகிமை விளங்கும்..."

மரங்கள் என்பது மனிதர்களை குறிக்கிறது. உலகெங்கும் சுவிசேஷத்தை அறிவித்து, மக்களை இயேசு கிறிஸ்துவின் ஆளுகைக்குள்ளாகக் கொண்டு வருவதுதான் "ஆலயம் கட்டுவது" என்பதற்கான அர்த்தம்; கட்டிடம் அல்ல. இந்த வேலைக்கு சகலவிதமான ஊழியர்களும் தேவை. சுவிசேஷம் அறிவிக்க அபிஷேகம் பெற்ற வேலையாட்கள் தேவை. உடல் உழைப்பும் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது, கூட ஞானமும் தேவை. Computer, Sattelite, Bible Centre, Tracts, நற்செய்தி அறிவிப்பு கூட்டங்கள் இப்படிப் பட்ட காரியங்கள் இல்லாமல் இக்காலத்தில் சுவிசேஷம் அறிவிக்க முடியாத சூழ்நிலை. இங்கேயெல்லாம் தேவபிள்ளைகளுடைய உழைப்பு தேவையாயிருக்கிறது. அடுத்ததாக தேவையானது பணம். இந்தக் காரியமும் தேவ ஜனங்களின் கரங்களில் இருந்துதான் வரவேண்டியதாயிருக்கிறது. பணம் மட்டுமல்ல, வசனமும், உழைப்பும் கூட இங்கே "விதை" களாகத்தான் செயல்படுகிறது.

"விதைப்பும் அறுப்பும்"விதி Gravitational Power போல செயல்படுகிறது! ஒரு கல்லை மேலே எறிந்தால் அது கீழே வந்து விழத்தான் செய்யும். இது "புவியீர்ப்பு சக்தி" என்கிற இயற்கை விதி. இதற்கு விசுவாசம் தேவையில்லை. "நான் எறிந்த கல் கீழே வந்து விழும் என்று விசுவாசிக்கிறேன்" என்று அறிக்கை செய்ய தேவையில்லை, விசுவாசித்தாலும் விசுவாசிக்காவிட்டாலும் அது கீழே வந்து விழுந்தே தீரும். அதே போல்தான் விதையும்! ஏனென்றால் நாம் விதை பற்றிய வசனங்களை விசுவாசித்து தான் விதைத்திருக்கிறோம். இனிமேல் Automatic ஆக செயல்படும் அது. அதனால் தேவன் நமக்கு வைத்திருக்கும் வேலையை மட்டும் செய்தால் போதும். குடும்பத்தை காப்பாற்ற, சம்பாதிக்க வேண்டியது குடும்ப தலைவனுடைய கடமை. குடும்பத்தை

பொறுப்பெடுப்பது தலைவியுடைய கடமை. தட்டிக் கழித்தால் பல விபரீதங்களை சந்திக்க வேண்டியது வரும். அதே போல்தான் சுவிசேஷ வேலையும். அது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது, அறிவிக்காதிருந்தால் நமக்கு ஐயோ! தட்டிக் கழித்ததினால்தான் மேலே சொல்லப்பட்ட வசனத்தின்படி தேவ கோபம் நமது விளைச்சலின் மேல் இறங்கிற்று. தேவ கோபம் மாற மாற்று வழி எதுவும் சொல்லப்படவில்லை.

ஆனால் நம் ஆவியில் எழுப்புதல் இல்லாமல் சுவிசேஷம் அறிவிக்கவும் முடியாது (ஆகாய்.1:14). அதற்கு பரிசுத்தாவியானவர்தான் வேலை செய்ய வேண்டும். அதனால் முதலில் அவருக்கு இடம் கொடுப்போம். தேவன் நமக்கு தந்திருக்கும் வேலையை ஒழுங்காக செய்தால் தேவன் அவர் வேலையை இம்மி பிசகாமல் செய்வார்! பிறகு...

100 மடங்கு அறுவடை நம் வீட்டுக்கு வரும், எளிமையான சாப்பாடு கூட வாய்க்கு ருசியாக இருக்கும்! நமது **Money Purse**-ல் கிழிசல் விழாது, நமது விளைச்சலை தேவனே பத்திரமாக வீட்டுக்கு கொண்டு வந்து சேர்ப்பார்.

## பூரண பிரமாணத்தை உற்றுப் பாருங்கள்: (வச. யாக்.1:22-25)

நாம் தேவனுக்கு கொடுப்பது, அவரிடமிருந்து பெற்றுக் கொள்வது பற்றி எத்தனையோ பிரசங்கங்கள் கேட்டிருப்போம், புத்தகங்கள் படித்திருப்போம். என்றாலும், அவைகளின் படி நடக்காவிட்டால் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம் என்றுதான் அர்த்தம். முகம் பார்க்கும் கண்ணாடியில் நம்மை பார்த்துக் கொள்வதற்கு ஒப்பனையாக இந்த சத்தியம் வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

முகம் பார்க்கும் கண்ணாடியை பற்றி நமக்கு தெரிந்திருக்கும் காரியம் மிகக் குறைவானதே.

பெரும்பாலானோர் முகம் பார்க்கும் கண்ணாடியை கண்களினால் பார்க்க முடியும் என்று தவறாக நினைக்கிறார்கள்.

கண்ணாடியில் இருக்கும் அழுக்கை வைத்தோ, அதன் சட்டம், அதில் பிரதிபலிக்கப்படும் பொருட்களை வைத்து அதை பார்க்க முடிவதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதே போல்தான் நாம் வசனங்களை தியானம் செய்யும் காரியமும் இருக்கிறது. அதை நன்றாக புரிந்து கொண்டிருப்பதாக திருப்தி பட்டுக் கொண்டிருக்கிறோம். என்றாலும் அதற்கு கீழ்ப்படியாவிட்டால், அந்த முகம் பார்க்கும் கண்ணாடியைப் பற்றிய தவறான அபிப்பிராயம்தான் இதற்கும் பொருந்தும். அதாவது வசனத்திற்கு கீழ்ப்படிய முடியாவிட்டால், அந்த வசனம் புரியவில்லை என்றுதான் அர்த்தம்! முகம் பார்க்கும் ஆடியில் நம் முகத்தை அப்படியே தத்ரூபமாக பார்ப்பதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் தவறான கருத்துதான்.

கண்ணாடியில் பார்க்கும் போது நம் வலது கன்னத்தில் உள்ள மச்சம் இடப்புறத்தில் இருப்பது போலவும், வலப்புறமாக சீவப்பட்டிருக்கும் தலைமுடி இடதுபக்கமாக சீவப்பட்டிருப்பது போலவும், இடது பக்கமுள்ள சட்டைப் பை, வலது பக்கத்தில்; இப்படியாக சொல்லிக் கொண்டேப் போகலாம். மிக முக்கியமான காரியம் நம் முகத்தின் உண்மையான சாயலே கண்ணாடியில் கிடைப்பதில்லை. கிடைப்பதாக நம்மையே ஏமாற்றி திருப்திப் பட்டுக் கொள்கிறோம்.

இதே போலத்தான் நாம் ஆசீர்வாதங்களுக்கடுத்த வசனங்களை தியானிக்கும் போது, அவற்றை விசுவாசிக்கிறோம். அதுமட்டுமல்லாமல் நாம் அதற்கு கீழ்ப்படிவதாக நம்மை நாமே திருப்திப் படுத்திக் கொள்கிறோம். விதைத்தால்தான் அறுவடை என்ற பூரணமான சத்தியத்தை நன்றாய் விசுவாசிக்கிறோம். அது மிக மிக நல்லதுதான்! என்றாலும் விதைக்காமல் இருக்கிறோம். இது ஏன், எப்படி நடக்கிறது? நாம் அளவுக்கதிகமான நம் விசுவாச வழியில் செல்லும் போது, நாம் கிரியை

செய்யாவிட்டாலும், கிரியை செய்வதைப் போன்ற ஒரு மாயை நம்மை வந்து மூடுகிறது. இது என்னுடைய அனுபவப்பூர்வமான உண்மை. இப்படியாக நாம் சாத்தானால் ஏமாற்றப்படுகிறோம்.

ஆனால் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு உண்மை நிலை தெரியும். கண்ணாடியில் நம்முடைய நிஜமான சாயல் நமக்குத் தெரியாவிட்டாலும் நம்மை நேரிடையாக பார்க்கும் மற்றவர்களுக்கு நம் நிஜ ரூபம் தெரியுமே! அதுபோல்தான் இதுவும். கிரியையில்லாத செத்த விசுவாசத்தோடு செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களிடம் போய் அவர்களின் குறையை சுட்டிக் காட்டினாலும் அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. அவர்கள் மேல் பொய்க்குற்றம் சாட்டப்படுவதாக வேறு நினைத்துக் கொள்கிறார்கள். சாத்தானின் மாயத்திரை தான் இதற்கும் காரணம்.

வசனத்தின்படி, இயேசு சிலுவையில் நமக்களித்த சுயாதீனப்பிரமாணத்தை உற்று நோக்கி, அதிலே நிலைத்திருந்து, மறந்துப் போகாமலிருக்க குறிப்பெடுத்து, (முக்கியமாக இருதயத்தில் குறிப்பெடுத்து) கீழ்ப்படிந்து நடந்தால், நல்ல அறுவடையை பெற்று பாக்கியவான்களாயிருப்போம்.

## ஆசீர்வாதக் கட்டளைகள் செயல்படும் விதம்:

வாக்குத்தத்தமானது அதன் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போதுதான் நிறைவேறுகிறது என்பது ஆயிரம் முறை கேட்ட பிரசங்க வாக்கியம். என்றாலும் ஒரு முறைகூட செயலிலே செயல்படுத்திப் பார்க்காத வீணாக்கப்பட்ட வாக்கியம். e.g.: "உன் ஆத்துமா வாழ்வது போல" - கட்டளை

"நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருப்பாய்" (வாக்குத்தத்தம் நிறைவேறுதல்...)

நம் ஆத்துமா ஜீவனுள்ளது. அது வாழ்கிறது, அனுதினமும் வளர்கிறது 10%, 20%, 30% ... என்று. அதற்கேற்றபடி நம் ஆசீர்வாதமும் வளர்கிறது. குழந்தை பருவத்திலிருந்த ஆத்துமா வளர்ந்து முதிர்ச்சி அடைய அடைய வசனத்திற்கு கீழ்ப்படிந்து விதைக்க ஆரம்பிக்கிறது. நமக்கு விளைச்சல் கிடைப்பதால் சுகமாக வாழ முடிகிறது.

கொஞ்ச நேரம் ஹெலிகாப்டரில் பறப்போம்! (கற்பனையில்தான்) அங்கேயிருந்து கீழே பார்க்கும் போது ஹெலிகாப்டரில் உங்கள் நண்பரின் வீட்டிற்கு மேலாக பறந்துக் கொண்டிருப்பதை அறிந்துக் கொள்கிறீர்கள்! (கற்பனைதான் என்பதை நினைவில் நிறுத்தி கொள்ளவும்.) நண்பருக்கு ஏதாவது செய்தி அனுப்பலாம் என்ற எண்ணம் வருகிறது, உடனே ஒரு பேப்பரில் எழுதி, கடிதத்தை ஒரு கல்லில் கட்டி, வீட்டிற்கு நேராக ஹெலிகாப்டர், சுமார் 100 கி. மீ. வேகத்தில் பறக்கும் போது கீழே போட்டு விடுகிறீர்கள். சரி, வேலை முடிந்தது, கடிதம் நண்பர் வீட்டுத் தோட்டத்திற்குள் விழும், எடுத்துக் கொள்வார் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் நடக்காது!

அந்த கடிதம் கீழே விழும் போது கவனித்தால் ஒரு வினோதம் நடந்திருப்பதை கண்டிருக்க முடியும். அது, ஒரு நூலால் ஹெலிகாப்டருடன் கட்டப்பட்டிருப்பதைப் போல தொடர்ந்து வந்துக் கொண்டிருக்கும். தொடக்க வேகத்தை கடிதத்துடன் கட்டப்பட்ட கல் இழக்காததினால் இப்படி நடக்கிறது. அதன் நேர்க்குத்து, கிடைமட்ட இயக்கம் இரண்டும் இணைவதால் கடிதம் வேறொரு பிரமாண்டமான வளை பாதையில் சென்று, நண்பரின் வீட்டைக்கடந்து சுமார் 390 மீ. தொலைவில் போய் விழுகிறது!

என்ன இது? நான் புத்திசாலித்தனமாகத்தானே வேலை செய்தேன்? பிறகு ஏன் இப்படி நடந்தது?

புலம்ப ஆரம்பிக்கிறீர்கள். ஒரு நிமிஷம், நான் வாக்குத்தத்தங்களையெல்லாம் ஒழுங்காக வாசித்து, அறிக்கை செய்து, எழுதி வைத்து ஜெபித்தேனே, எனக்கு ஏன் சம்பள உயர்வு வரவில்லை, ஏன் கடன் தீரவில்லை, தொழில் ஏன் நஷ்டமானது? ஏன் பணப்பிரச்சனை? என்றெல்லாம் புலம்புகிறோமே, நம் பக்கத்தில்தான் அந்தத் தவறு நடந்தது.

கடிதத்திற்கு என்ன நடந்தது?

Formula : $S = \frac{1}{2} gt^2$

$T = (2S / g)^{1/2}$

S = உயரம்; t = நேரம்;

g = ஈர்ப்பு வளர் வேகம் (9.8 m/sec.)

விழும் நேரம் = $(2S/g)^{1/2}$

அதாவது, 1000 மீட்டர் உயரத்தில், சுமார் 100 கி. மீ. வேகத்தில் பறக்கும் ஹெலிகாப்டரில் இருந்து கடிதம் விழும் போது,

$t = (2 \times 1000 / 9.8)^{1/2} = 14$ (approx.)

சுமாராக (14 வினாடிகள்) பிடிக்கும்.

இந்த நேரத்தில் அந்த கல் = 1,00,000 மீ. / 3600 வினாடி X 14 = 390 மீட்டர் (approx.) முன்னோக்கிச் சென்றிருக்கும்.

இப்படியாகத்தான் வாக்குத்தத்த கட்டளைகளையும் போதிய ஞானமில்லாமல் செயல்பட விடுகிறோம், நாம் எதிர்பார்த்திருந்த ஆசீர்வாதத்தையும் தவற விட்டு விடுகிறோம். அப்படியானால் என்னதான் செய்வது? கடிதத்தை நண்பர் வீடு வருவதற்கு 390 மீட்டர் தூரம் இருக்கும்போதே கீழே போட்டு விட வேண்டும், அவ்வளவுதான்! மேலே சொல்லப்பட்ட Formula-வின் படி நண்பர் வீட்டு தோட்டத்தில் போய் சரியாக விழுந்து விடும். மிக ஆச்சரியமாக உள்ளதல்லவா? அமைதியாக இருந்து மனதில் கணக்குப் போட்டு பார்க்கவும்.

வாக்குத்தத்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து காத்திருப்போம், வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான ஆவிக்குரிய Formula- தன்னிச்சையாக செயல்படும்!

## யாரிடமிருந்து விதையை பெற்றிருக்கிறோம் ?

### தேவனிடமிருந்தா? சாத்தானிடமிருந்தா?

ஆதி. 3:1-5 ல் சாத்தான் ஏவாளின் மனதில் விதைத்த விதை எது? "தேவன் நல்லவர் அல்ல" என்ற பொய்யான விஷ விதைதான் அது! அதை அவள் நம்பினாள், நம்பத்தகுந்த விதத்தில் சாத்தான் பேசினான். விளைவு விபரீதமாகி விதை முளைக்க ஆரம்பிக்கிறது. உலகத்தையே ஆக்கிரமித்தது. தன்னையும், ஆதாமையும், பூமியையும், அதன் நிறைவையும் உருவாக்கிய தேவன்மேல் அவளுக்கு சந்தேகம் வந்ததினால்தான் தேவனுடைய கட்டளையை மீறினாள். தேவன் நல்லவர் என்று அவள் விசுவாசித்திருந்தால், அவர் நன்மைக்காகத்தான் தோட்டத்தின் நடுவில் இருந்த மரத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று சொன்னார் என்பதையும் விசுவாசித்து கீழ்ப்படிந்திருப்பாள். தேவன் நல்லவரில்லை என்று சாத்தானால் ஊன்றப்பட்ட வார்த்தையை அவள் விசுவாசித்ததினால்தான் சாத்தானுக்கு கீழ்ப்படிகிறாள்.

தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்வதில்லை, ஏனென்றால் தேவனுடைய "வித்து" அவனுக்குள் ஊன்றப்பட்டிருக்கிறது என்று வேதம் சொல்கிறது. அப்படியிருக்கும் போது ஒருவன் பாவம் செய்கிறவனானால் தேவனுடைய வித்து அவனிடமில்லை, அவன் தேவனால் பிறக்கவில்லை என்று அர்த்தமாகிறது. அதுமட்டுமல்ல, சாத்தானுடைய வித்து அவனுக்குள் விழுந்திருக்கிறது, இந்த விபரீதம்தான். ஏதேன் தோட்டத்தில் நடந்தது, இன்றுவரை தொடர் கதையாக சாத்தானால் எழுதப்பட்டு உலக மக்களுக்குள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு "முற்றும்" வைக்க வேண்டிய மிகப் பெரிய தரிசனத்தின் "ஒரு துளி" தான் இந்த வெளிப்பாடு.

தேவன் முதன் முதலாக உலகில் "நல்ல விதை"களைத்தான் உருவாக்கினார், அதனால்தான் எல்லாவற்றையும் "நல்லது என்று கண்டார்"ஆதி.1:11,12. ஆனால் ஏவாள் தன் புத்தியீனத்தினால் சாத்தானின் "கெட்ட விதை"களை பூமியில் விழும்படி செய்தபடியால் சாபங்கள் முளைத்தெழும்பின. ஆதி.3:17,18. அதற்கு பிற்பாடுள்ள உலகத்தை தேவன் "நல்லது என்று காணவில்லை!"ஆதி.6:5-7.

நோவா கால வெள்ளத்தினால் உலகம் முழுவதும் அழிந்த பின்பும் உலகின் சாப விதைகள் முழுவதும் அழிந்து போகவில்லை. ஆதி.8:21,22. அது **Recycling Seed** ஆக இன்றளவும் உலகில் தன் கை வரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறது. "பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது" நீ காணிக்கை கொடுத்துதான் அவர் வாழப் போகிறாரா? என்பதான சாத்தானுடைய விதைகளுக்கும் குறைவில்லை. அவைகள் விழுந்து முளைப்பதும் நிற்கவில்லை. அதனால்தான் சுவிசேஷ வேலை கேள்விக் குறியில் நிற்கிறது. கேள்விக்குப் பதில் நம்மிடம்தான் இருக்கிறது.

## பொருளாதாரத்தின் மீது நமது நிர்வாகம்:

தேவ பிள்ளைகள் வறுமையோடிருப்பதற்குக் காரணம்; 70% மக்கள் வருமானத்தை விட 30% அதிகமாக செலவழிப்பதுதான் காரணம். (மீதமுள்ள 30% மக்கள் அவ்விதம் செய்வதில்லையென்பதால் அவர்களுக்கு பொருளாதார நெருக்கடி இல்லை.) இப்படி அதிகப்படியான செலவுக்கு காரணம் ஆடம்பரம்தான்! ஆடம்பரத்திற்கு காரணம் பெருமை! பெருமைக்கு தேவன் எதிர்த்து நிற்பதால் பொருளாதார தாக்கம் ஏற்படுகிறது.

எது ஆடம்பர செலவு? வருஷத்தில் ஒரு முறையோ, இரண்டு முறையோ உபயோகப்படுத்தக்கூடிய பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி மூலையில் போட்டு வைப்பதுதான் அது! சரி, அதற்கு என்னதான் தீர்வு?

பிதாவாகிய நம் தேவன் தன்னுடைய விலைமதிப்பற்ற பொக்கிஷமான தம் குமாரனாகிய இயேசுவையே நமக்கு கொடுத்திருக்கிறார். அவரை விட **Valuable things** எதுவும் உலகத்தில் கிடையாது என்பதை **Realise** பண்ணினாலே போதும். கடன் வாங்கியாவது விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் குவிக்க வேண்டும் என்ற எண்ணம் நம்மை விட்டுப் போய் விடும்! அடுத்ததாக நம்மை விட பொருளாதாரத்தில் உயர்நிலையில் இருப்பவர்களை பார்த்து பொறாமைப்படாமல் இருக்க வேண்டும். இதுவும் நாம் அநாவசியமாக செலவு செய்வதற்கான ஒரு காரணம் ஆகும். ("பொறாமை" பெருமையின் பல குழந்தைகளில் முதல் குழந்தை எனலாம்!).

பொறாமை படாமல் இருக்க முயற்சியெடுத்தும் முடியவில்லையா? முடியாதுதான், நமக்கு தெரிந்த ஒருவர் புதிதாக "**Car**" வாங்கியிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். உடனே பொறாமைப் படாமல், புன்சிரிப்புடன் அவருக்கு வாழ்த்துதல் சொல்ல வேண்டும், அடுத்ததாக அவருக்காக ஜெபிக்க வேண்டும்.

இவற்றை செய்யும் போது அவரைப் பற்றியுண்டான பொறாமை நம் இருதயத்தை விட்டு கழட்டிக் கொண்டு போய் விடும்.

பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே சிக்கனத்தை கற்றுக் கொடுக்க வேண்டும். "**Pocket Money**" விஷயத்தில் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும். "**Pocket Money**"-ஐ சேமித்து வைக்கவும், அதிலிருந்து தசமபாகம் எடுத்து வைக்கவும் பழக்க வேண்டும்.

பணத்தை தேவ வழிகளில் கையாள வேண்டும். அது...? தேவனுக்கென்று 10% கொடுத்து மீதமுள்ள 90%யும் தேவனின் பாதுகாப்புக்குள் கொண்டு வர வேண்டும். பிறகு அதில் இருந்து காணிக்கை, தர்ம பணம், சேமிப்பு, என்று நம் மனதின் நிர்ணயத்தின் படி எடுத்து வைக்கும் போது அதின் மீது தேவாசீர்வாதம் இருக்கும்.

"கடன்" என்ற அடிமைத்தனத்தில் இருந்து நாம் மீள வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே அதற்காக "யூபிலி வருஷம்"

என்ற நியமத்தை அமல் படுத்தியவர், தன் குமாரனால் சுயாதீன பிரமாணத்திற்கு உட்பட்டிருக்கும் நமக்கு அதிகம் செய்யவே பிரியப்படுகிறார். பணக்காரனாக வேண்டும் என்ற குறிக்கோளைவிட, கடனில்லாமல் வாழ வேண்டும் என்ற குறிக்கோளே மிகச் சிறந்தது. "கடன்!" இது ஒரு பயங்கர கொள்ளை நோய்! நரம்புத் தளர்ச்சியைக் கொண்டு வருகிறது! விவாக ரத்துகளுக்கான முக்கியமான காரணங்களில் இது முதல் இடத்தைப் பிடிக்கிறது! கடனிருந்தால் ஊழியம் செய்ய முடியாது. தசம பாகத்தையும் செலவழித்து விடுபவர்களுக்கு தேவன் ஊழியத்தை தலைகீழாக நின்றாலும் தர மாட்டார். "வெறுங்கையனாக உம்மை கண்டு கொள்ள வந்துள்ளேன்!" என்று பரலோகத்தில் போய் அசடு வழிய பாடிக் கொண்டு நிற்க வேண்டியதுதான்!

நம் கையிலிருக்கும் வேலையில் அலுப்பு தட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், **Hard Work** முக்கியம். (நீதி.13:11). வேதத்தில் சுமார் 2000 வசனங்களில் பரிசுத்தாவியானவர் பணத்தைப் பற்றிப் பேசுகிறார், ஆனால் ஒரு இடத்தில் கூட அதை நேசிக்க வேண்டும் என்பதற்கான ஆலோசனை இல்லை. காரணம் "பண நேசம்" ஒரு விக்கிரக ஆராதனையாகும்.

"**Trade**" என்ற சிறு பிள்ளைகளுக்கான ஒரு **Game** உண்டு. அதில் ரூபாய் நோட்டுகள் போல் அச்சிடப்பட்டிருக்கும் காகிதக் கத்தைகளை வைத்து விளையாடுவார்கள். **Business** அமோகமாக நடக்கும். நிறைய பணம் கைகளில் தவழும். அடுத்தது? அடுத்தவன் ஆரம்பிப்பான்! இந்த **Game** உலக பணத்தின் மாய சுழற்சிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு! திடீரென்று பிச்சைக்காரனுக்கு அதிர்ஷ்டம் அடிக்க, அவன் **Crore-**பதியாகி மாளிகையில் குடியேறுவான். கோடீஸ்வரனை துர்அதிர்ஷ்டம் தாக்கும், அவன் பிச்சாதிபதியாகி திருவோடு கூட வாங்க காசில்லாமல் ரோட்டில் நிற்பான்! (**"**ஆனந்தம் அடைவீர் அன்றாடம் வாழ்வில்**") - Joyce Mayer - Fill Frinkle** என்ற ஒரு ஊழியருடனான பேட்டியில் - **Vijay T.V.)**

நான் சூரியனுக்குக் கீழே கண்ட மகா தீங்கான காரியம் ஒன்றுண்டு. அது, தேவனில்லாத புறஜாதியாருக்கும் பணம் நிரந்தரமல்ல என்ற உண்மை தெரிந்துதான் இருக்கிறது. என்றாலும் பணம் தேடுவதிலேயே தங்கள் வாழ்க்கையை தொலைக்கிறார்கள். ஏன்? இயேசு இல்லாதினால் தானோ?

சாலமோன் ராஜா தேவனிடம் ஞானத்தைதான் கேட்டார், தேவன் அவனுக்கு ஞானத்துடன் சேர்த்து ஐசுவரியத்தையும், தீர்க்காயுசையும் கொடுத்து விட்டாரே, அது போல நாமும் ஞானத்துக்காக ஜெபித்தால் போதும். சரி. இந்த "விதை" கதையெல்லாம் நமக்கு எதுக்கு? என்று யோசிப்பவர்களுக்கு, ஒரே ஒரு சம்பவம் பற்றி மட்டும் கூற விரும்புகிறேன்.

சாலமோனுடைய அப்பா தாவீது ராஜா மரிப்பதற்கு முன்பாக தேவனுடைய ஆலய கட்டுமானத்திற்காக, முன் பணமாக கொடுத்த காணிக்கையின் மதிப்பென்னவென்று உங்களுக்குத் தெரியுமா? பல காலம் காலமாக வேதத்தை அறிந்த நமக்குத் தான் இந்த விபரம். இன்றைய நிலவரப்படி 5000 கோடி ரூபாய்! **(Five thousand crore only!)** (ஏதேனும் சந்தேகம் இருப்பின் எங்களுக்கு எழுதிக் கேளுங்கள். அல்லது வேதத்தை உற்று நோக்குங்கள்.) சாலமோன் ராஜாவொன்றும் விளைச்சலை, அறுவடையை சும்மா பெற்று விடவில்லை!

ஒரு கணக்குப்படி சிறியதும் பெரியதுமான சுமார் 3000 பாவங்களை மக்கள் செய்யும் படி தூண்டி, அவர்களை பாதாளத்திற்கு இழுத்துச் செல்லும் சாத்தானுடைய மகா பிரமாண்டமான தொழிற்சாலை "சினிமா"! அதிலும் இந்திய திரைப்படங்கள் மக்கள் மனதில் பண ஆசையை விதைப்பதில் பெயர் பெற்றவை. ஊடுருவ குத்த, ஈட்டிகளை தாங்கி வரும் வேடன்கள் நிறைந்தவை.

"பொன் மகள் வந்தாள், பொருள் கோடி தந்தாள்" என்ற ஒரு தமிழ் திரைப்படப் பாடல், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதில் நடிப்பார். அதில் "பொன் மகளாக" சித்தரிக்கப்படும் பெண், பொன் - பண நோட்டுக் கத்தைகள் - தங்க நாணயங்களாலான

மாளிகையில் இரண்டரை நிமிடங்கள் நடனமாடுவாள், நம் விழித்திரையில் நிலைத்திருப்பாள், பிறகு மாயமாக மறைந்து போவாள்! விசுவாசப் பிள்ளைகளை ஏமாற்றும் சாத்தானின் உலக ஆசீர்வாதத்திற்கான மாயாஜால வித்தையிது! விசுவாசிகளே! உஷார்! வீணாக காத்திருந்து காலத்தை வீணடிக்க வேண்டாம், பொன் மகள் ஒருபோதும் வரவே மாட்டாள்! வாக்குத்தத்த கதவோரம் காத்திருங்கள், இயேசு கிறிஸ்து குறித்த வேளையில் நிச்சயம் வருவார், அவர் ஏமாற்ற மாட்டார்.

## கைத்தடிகள்: (Walking Sticks)

கோவை மாவட்டத்தில், ஆனைமலை எஸ்டேட் பகுதிகளில் தேயிலை தோட்டங்களில் தலைமை பொறுப்பாளராக, சுமார் 50 ஆண்டுகளாக வேலை பார்த்து, ஓய்வு பெற்றவர் என் தாத்தா. சொந்த ஊரான திருநெல்வேலி மாவட்டத்திற்கு வந்து, தன் குக்கிராமத்தில் சொந்தமாக வயல்வெளிகளையும், வீட்டையும் ஏற்படுத்தி வைத்த தாத்தாவை அவருடைய மூன்றாம் சந்ததியினர் வரை எல்லோரும் மறந்து அதிக நாளாச்சி. அவர்களின் ஞாபகமாக சில கைத்தடிகள் மட்டும் தாத்தா வீட்டு மொட்டை மாடியில் புகை போக்கியினருகே வைக்கப்பட்டிருப்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்.

தேயிலை தோட்ட அனுபவங்களை அடிக்கடி தன் “மலரும் நினைவுகள்” பகுதியில் தாத்தா வெளியிடுவதுண்டு. அந்த ஞாபகங்கள்... தாத்தா கைத்தடியை எடுக்காமல் வெளியே சென்றதை நான் பார்த்ததில்லை. அந்த தடியை பற்பல காரியங்களுக்கு தாத்தா பயன்படுத்தியதுண்டாம். மேடான இடங்களில் தரையில் ஊன்றிக் கொள்ளவும், சிறு பூச்சிகளை அடித்துக் கொல்லவும், கால்வாய்கள் எதிர்ப்படும் போது ஊன்றிக் கொண்டுத் தாண்ட, காட்டுப் பகுதிகளில் மண்டிக் கிடக்கும் செடி கொடிகளை விலக்கி விட்டபடி நடக்க, இப்படிப் பல காரியங்களுக்கு பயன்படுத்துவார்களாம். ஓய்வு எடுக்கும் போது அதை தரையில் ஊன்றி வைத்துவிட்டு, அதன் மேல் தொப்பியை கவிழ்த்து வைத்து விட்டு உட்கார... ஒரு முறை பாம்பைக் கூட தன் கைத்தடியால் அடித்தது உண்டாம்!

அது போகட்டும்... ஆண்டவருடைய வார்த்தைகளும் இந்த **Walking Stick** போன்றது தான். (சங்.23:4)

“தேசத்தில் இன்னும் சில வருடங்களில் ஒரு பெரிய பொருளாதார தாக்கம் ஏற்படும்” என்று ஒரு பொருளாதார நிபுணர் அறிக்கை வெளியிடும் போது, “நீதிமான் துர்செய்தியை கேட்கிறதினால் பயப்படான், அவன் இருதயம் கர்த்தரை நம்பி திடனாயிருக்கும்”(சங்.112:7) என்ற வசனம் நமக்கு ஊன்றுகோலாகிறது!

அடுத்த நாளை பற்றிய கவலை தோன்றும் போது, “நாளைக்காக கவலைப்படாதிருங்கள், அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும்”(மத்.6:34) என்ற வசனமும், எதிர்காலத்தை குறித்து கலக்கம் உண்டாகும் போது, “அவர் என் பேரில் நினைக்கிற நினைவுகள்... தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே” (எரே.29:11) என்ற வேத வாக்கியமும் கைத்தடிகளாகின்றன.

வாக்குத்தத்தங்களை குறித்து சந்தேகம் எழும்பும்போது, “அமெரிக்கையும், நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்” (ஏசா.30:15) என்ற வசனமும், பிரச்சனையால் பதற்றமடையும் போது, “விசுவாசிக்கிறவன் பதறான்”(ஏசா.28:16) என்ற வசனங்களும் **Walking Stick** ஆக உருவெடுக்கும்.

காணிக்கை கொடுக்க உற்சாகமில்லாமல் போகும் போது “உற்சாகமாக கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்” (2கொரி. 9:7) என்ற கைத்தடியும், பிச்சைக்காரனைக் கண்டும் காணாமல் ஒதுங்கி நடக்கும் போது “ஏழைக்கு இறங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான்” என்ற கைத்தடியும் ஓங்கிக் கொண்டு வரும். எனது தாத்தாவின் கைத்தடிகள் “லேசுப்பட்டவைகள் அல்ல” என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும்.

## வீணாகிப் போய்க் கொண்டிருக்கும் எரிசக்திகள்:

நோவாவின் காலத்தில் பூமியெங்கும் வெள்ளம் வந்து மூடிக் கொண்டபோது, பல கோடிக்கணக்கான மிருகங்கள் புதையுண்டு, அழுத்தப்பட்டு, வெப்பத்தினால் பெட்ரோலாக மாறின.

(சோதனைச் சாலையில், மக்கிப் போன மிருகங்களின் உரத்தை 1 சதுர அங்குலத்திற்கு 2000 முதல் 5000 பவுண்டு என்ற அழுத்தத்தில் கார்பன்-டை-ஆக்சைடு, நீராவி முன்னிலையில் 20 நிமிடத்திற்கு 726 டிகிரி ஃபாரன்ஹீட் உஷ்ணப்படுத்தினால் அது பெட்ரோலாக மாறுகிறது.)

அதே காலக்கட்டத்தில் பூமியில் வளர்ந்திருந்த கோடிக்கணக்கான மரங்களும் புதைந்து, அழுகிப் போகுமுன்பாகவே அழுத்தப்பட்டு வெப்பம் உருவானதாலும், சுற்றிலும் தண்ணீர் சூழ்ந்திருந்ததினாலும் நிலக்கரியாக மாறியுள்ளது.

இதைப் போலவே நம் வாழ்க்கையிலும் ஆண்டவரால் அனுமதிக்கப்படும் துன்ப துயரங்கள் இருதயத்தின் ஆழத்தில் போய் தங்குகின்றன. கால ஓட்டத்தில் அவை கண்ணீரால் சூழப்பட்டு ஆவிக்குரிய எரி சக்தியாக சேமித்து வைக்கப்படுகிறது. பிறகு அது அநேகருக்கு பயன்பட ஆரம்பிக்கிறது. இந்த புத்தகத்தின் “கருப்பொருளின்”படி தரித்திரம் வரும் போது அதன் வேதனை இருதயத்தின் அடியில் **Fossils** போல கருமையாக படிகிறது. காலச்சுழற்சியில் எப்படியாவது இந்த அரக்கனின் பிடியில் இருந்து வெளியேற வேண்டும் என்ற உத்வேகம் அந்த படிமங்களுக்கு **Pressure** கொடுக்கிறது. சமயம் பார்த்து காத்துக் கொண்டிருந்த பரிசுத்தாவியானவர் மறுரூப பார்வையுடைய கண்களை பொருத்துகிறார். ஆவியில் எழுப்புதல் உண்டாகிறது, தரிசனம் பிறக்கிறது, “ராஜபாதை” கண்களுக்குத் தெரிகிறது. (நீதி.15:19)

அன்று நோவா வெள்ளத்தினால் உருவாக்கப்பட்ட அந்த இரண்டு எரிபொருள்களும் சுமார் 6000 வருஷங்களாக இம்மட்டும் மக்களின் தேவைகளை சந்தித்து வந்திருக்கிறது.

தேவனின் “மௌனம் கலையப்போகிற” இந்த கடைசி காலங்களில்தான் அவைகளுக்குத் தட்டுப்பாடு வர ஆரம்பித்திருக்கிறது. உலக தோற்றமுதல் வாழ்ந்து மடிந்த தரிசனம் பெற்ற பரிசுத்தவான்களின் எரிசக்திதான் இன்று உலகத்திற்கே ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. உதாரணத்திற்கு “இரட்சிப்பு”. (அதே நேரத்தில் சாத்தானிடமிருந்து தரிசனம் பெற்ற அவனுடைய கூட்டத்தாரின் எரிசக்தி உலகத்திற்கு “சாபமாக” இருந்து வருகிறது என்பதையும் மறுக்கமுடியாது.)

உலகம் ஆசீர்வதிக்கப்பட நாம் அழுத்தப்படுவது அவசியமாகிறது.

இன்று 1 **second**-கிற்கு 2-லிருந்து 3 பேர் வீதம் என்று மனிதர்கள் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த கணக்கீட்டின் கடிகார வேகம் நாளுக்கு நாள் விரைவாகிக் கொண்டிருக்கிறது. எப்போதும் “ஆ” என்று வாயைப் பிளந்துக் கொண்டிருக்கும் பாதாளத்தின் வாயை இறுகக் கட்ட ஒரே வழி சுவிசேஷ அறிவிப்பை தீவிரப்படுத்துவது தான். அதன் முக்கிய தேவைகளில் ஒன்று பணம். அதற்கு **Particular** ஆக “விதை, ஐசுவரியம்” போன்ற தரிசனம் பெற்ற தேவ ஜனங்கள் தேவை.

இந்த ஊழியத்தின் மேல் ஊற்றப்பட ஆட்கள் தேவை. (பிலிப்பியர். 2:17)

# க"விதை"கள்!

## "விதை"

இந்த தரிசனம் என் கையில் கிடைத்த போது...

படுத்திருந்த பாயின் மீது கனவுச் சிறகுகள்!

காற்று ஒரு செய்தி அனுப்பியிருந்தது... அதில்...

என் பிரியமே, என் ரூபவதியே,

"உன் நேசர் வந்துக் கொண்டிருக்கிறார்!" என்றிருந்தது!

## விதையின் இரகசியம்!

ஆதாமிடம் கையளிக்கப்பட்ட உலகம்

எழில் மயமாய் பூத்துக் குலுங்கியது.

சாத்தானால் கொள்ளையடிக்கப்பட்டபோது...

பார்வையிழந்து அழுது வழிந்தது!

அந்த கண்ணீரைத் துடைக்கவே...

## ஓடு!

என் ஆசீர்வாத எல்லையை அடைய

ரோடு போட்டார் என் தேவன் இயேசு.

சாத்தான் அதை வேலி போட்டு அடைத்தான்!

குதித்தேன் தாண்டி!

எடுத்தேன் ஓட்டம்...

## ஆசை வார்த்தை...

"நகமும் சதையுமாய் நாம் இணைந்திருப்போம்"

என்று பேசி தரித்திரம் என்னை மயக்க பார்த்தது.

நான் மசியவில்லை...

இயேசுவிடம் **Nail Cutter** வாங்கப் போய்விட்டேன்.

திரும்பி வந்து பார்த்தால், ஆளைக் காணவில்லை!

## உஷ்!

உங்களின் "இயேசு இல்லாத கடந்தகாலம்"

புதைக்கப்பட்டிருக்கும் கல்லறையின் அருகே...

உங்கள் அவிசுவாசத்தை நடமாட விடாதீர்கள்...

தரித்திரப் பிசாசின் தூக்கம் கலைந்து விடப் போகிறது!...

### முகவரி மாறிவிட்டது...

அறிமுகம் அறுந்து விட்ட என்னுடைய குயில்...

இயேசுவின் புதிய தோட்டத்திற்குள் புகுந்து...

வாக்குத்தத்த கிளைகளில் கூடு கட்ட ஆரம்பித்தது...

பழையதை மறந்து போனது!

### காத்திருந்த காலங்கள்...

“காலடி சுவடுகளை” சேகரிப்பதை விடு!

“மலரும் நினைவுகளின்” மீது மண்ணைப் போட்டு மூடு!!

கனவிருட்டின் பொழுது... விடியப் போகிறது!!!

விடியலை எதிர்நோக்கியிருந்த சேவல் கூவ எழுந்து நிற்கிறது.

கிறிஸ்துவுக்குள் “ஆம்” என்றிருந்த வாக்குகள் “ஆமென்” என்கின்றன!

### ஜெபமே ஆயுதம்

காரிருட்டு!

என் வீட்டு வெளிச்சத்துக்கு மட்டும் ஜன்னல், பொன் சட்டமிட்டிருந்தது!

ஊரெங்கும் உறங்க, என் மனம் சோம்பல் முறித்துக் கொண்டது!!

எதிர்த்து வரும் அரக்கனிடமிருந்து நம் ஆசீர்வாதங்களை திரும்பப் பெற...

போர்ப்படை தளபதியாக நம் இயேசுதானே போயாக வேண்டும்!

அவரிடம் ஆயுதங்களை கொடுக்கத்தான்...

### விதை ஏன் முளைக்கவில்லை?

இருள் மொய்த்திருந்த என் விசுவாசத்தின் அந்தக் காலங்களில்...

தோலுரிந்து விட்ட கருப்பு விதைகளை

பாறையின் இடுக்கில் இருந்து வெளியே எடுக்க...

அடிக்கடி முயற்சித்ததுண்டு...

விசுவாசத்தின் மேல் போர்த்தியிருந்த

இருள் போர்வையை பரிசுத்தாவியானவர் விலக்கியபோது,

பாறையின் பல்லிடுக்கில் சிக்கியிருந்த விதை...

என் முயற்சியில்லாமலேயே நல்ல நிலத்தில் விழுந்து

முளைக்க ஆரம்பித்தது...

## மணல் கட்டியினடியில் மட்கிப் போன விதை!

பூமியும் அதன் நிறைவும் நம் கர்த்தருடையதாக இருந்தபோதிலும், அவருடைய பிள்ளைகள் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளாமலேயே வாழ்வதற்கு என்ன காரணம்? ஒரு கதை பதில் சொல்கிறது...

சாகும் தருவாயிலிருக்கும் வயதான தகப்பனார் ஒருவர் தன் நான்கு பிள்ளைகளையும் அருகில் அழைக்கிறார். மூத்தவனுக்கு ஒரு பவளம் பதித்த தங்கச் சங்கிலியையும், இரண்டாமவனுக்கு வைர மோதிரத்தையும், தன் குமாரத்திக்கு பவள கம்மலையும் கொடுத்தார். கவனித்துக் கொண்டே நின்றிருந்த மூன்றாவது குமாரனை அருகில் கூப்பிட்டு ஜான் பனியன் எழுதிய "மோட்சப் பிரயாணம்" என்ற புத்தகத்தின் புதிய பிரதி ஒன்றை கையில் கொடுத்தார்! அதிர்ச்சியில் உறைந்த அவன், புத்தகத்தை வாங்கி அலமாரியில் வைத்து விட்டு வெளியே வந்தான். அவன் வீட்டை விட்டு ஒரேயடியாகவே வெளியே போய் விட்டான் என்பதை அப்போது யாரும் கவனிக்கவில்லை. அவனுடைய கோபத்துக்குக் காரணம் என்ன?

அதை தெரிந்துக் கொள்ள சில மாதங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தை சொல்லியாக வேண்டும். +2 படித்துக் கொண்டிருந்த அந்த மூன்றாம் மகன் ராஜா தன் தகப்பனாரிடம் நெடு நாளாக **Motor Bike** கேட்டுக் கொண்டிருந்தான். ப்ளஸ் டூ முடித்தபிறகுதான் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தார். அப்பாவின் கண்டிப்பு அவனுக்கு தெரியும் என்பதால் வேறு வழியில்லாமல் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தான்.

**Flash back** முடிந்தது... கோபத்தில் வீட்டை விட்டு வெளியேறி நடந்துக் கொண்டிருக்கும் ராஜாவிடம் வருவோம்! "இனிமேல் இந்த வீட்டு பக்கமே காலடி எடுத்து வைக்க மாட்டேன்" என்ற தீர்மானத்துடன் நடந்துக் கொண்டிருந்தவனின் காலடியில் 10 வருடங்கள் உருண்டன! அவனைத் தேடும் முயற்சிகளும் உருவழிந்து நாளடைவில் இல்லாமல் போனது.

சென்னை பட்டிணத்தில் ஒரு ரோட்டோரமாக காட்சி விரிகிறது... ரோட்டோரமாக இருந்த ஒரு சிறிய கடைக்கு முன்பாக சைக்கிளை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்த மனிதன் ஒரு செகண்ட் திரும்பினான். கூர்ந்து பார்த்தால்... அட, நம்ம ராஜாதான். அவனுடைய தங்கை ராதா தன் கண்களை நம்ப முடியாமல், நிஜம்தானா? என்பதை நிச்சயித்துக் கொள்ள தன் கையை கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். பத்து வருஷங்களாக உழைத்து முன்னேறி சொந்தமாக கடை வைத்திருந்த அவனுடைய ஒரே சொத்து வெளியே நின்றிருந்த அவனுடைய ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு சைக்கிள்தான். அந்த சைக்கிளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய கண்கள் அண்ணன் கஷ்டப்படுகிறானே என்ற பரிதாபத்தால் கலங்கவில்லை. வேறொரு காரணத்துக்காக கலங்கியது. அது...

தன் அண்ணனுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு எல்லாவற்றையும் விளக்கியபோது வெளிப்பட்ட அந்த உண்மை அவனுடைய மூளையில் ஐஸ் கட்டியினால் ஒத்தடம் வைத்தது, நெஞ்செல்லாம் உறைந்து போனது! "கெட்ட குமாரன்" கதை (இல்லையில்லை நிஜம்) ஞாபகத்துக்கு வந்தது!

அவன் கோபத்தில் வீட்டை விட்டு வெளியேறிய ஒரு வாரத்தில் அப்பாவும் போய் சேர, சோக மேகங்கள் கலைய சில வாரங்கள் பிடித்தன. எதேச்சையாக ஒரு நாள் அலமாரிப் பக்கம் வந்த ராதா தன் அண்ணன் கோபத்தில் தூக்கி எறிந்து விட்டுப் போன "மோட்சப் பிரயாணம்" புத்தகத்தை பார்த்தாள், எடுத்து பக்கங்களை புரட்டிக் கொண்டே வந்தவளின் கண்களில் பட்ட ஒரு **Cheque**, அவளுடைய விரல்களுக்கு **Check** வைத்தது!

ராஜாவுக்கு புது பைக் வாங்குவதற்காக அப்பா அவனுக்கு கொடுத்திருந்த 50,000 ரூபாய்க்கான காசோலைதான் அது! அவனுக்கு சொந்தமான ஒரு விலையுயர்ந்த வாகனம் 10 வருடங்களாக அவன் கண்களுக்கு மறைவாகவே இருந்து வந்திருக்கிறது. அவனுடைய கோபத்தினால், பொறுமை குறைவினால், அவசரத்தினால் இது நடந்தது!

இதேபோல் அறியாமையினால், தேவ ஜனங்கள் இன்றைக்கும் விலையுயர்ந்த வாக்குத்தத்தங்களை வீசியெறிந்து விட்டு, வெறுமையுடன் வாழ்க்கை நடத்தும் ராஜாவின் நிலையில்தான் இருக்கிறார்கள்.

## மரபணு மாற்றப்பட்ட விதைகள்:
## Genetically Modified Seeds

இந்தியாவின், விளையும் முக்கிய தானிய வகைகளில் ஒன்றான நெற்பயிர் 6 மாதத்திற்கு ஒரு மேனி பலன் தரக் கூடியது. மக்கள் தொகை கூடி வருவதால் தேவைக்கேற்ப மகசூலைப் பெருக்க அரசாங்கம் பல திட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது. 6 மாதம் என்ற காலக்கட்டத்தை சுருக்கி 3 மாதங்களிலேயே நெல் விளையக்கூடிய முறையை இப்போது கையாண்டு வருகிறது.

அமெரிக்காவின் ஒரு கம்பெனி, ஒரு வகையான மரபணு மாற்றப்பட்ட விதைகளை அறிமுகப்படுத்தியது. அவைகள் சோதனைமுறையில் பயிரிட (மெக்ஸிகோ சோளத்தினை) அறிமுகப்படுத்தியுள்ளனர். அதை மெக்சிகோ நாடு தடை செய்தது. ஏன்? இந்த மரபணு மாற்ற விதையில் அநேக நன்மைகள் உண்டு என்றபோதிலும், உதாரணமாக குறுகிய கால விளைச்சல் - அமோக விளைச்சல் - பூச்சித் தாக்குதல் இல்லாத நிலை ஆகிய நன்மைகள் இருந்த போதிலும், இவ்விதைகளை விதைத்து கிடைக்கும் விதையை திரும்ப விதைக்க முடியாது. மேலும் மண்ணில் உள்ள அனைத்து சத்துப் பொருட்களையும் இப்பயிர் உறிஞ்சி விடுவதால் மண் மீண்டும் பயிர் செய்ய முடியாததாய் மாறி விடக்கூடிய அபாயம் உண்டு.

நம் நாட்டிலும் அந்த கம்பெனியாரின் பருத்தி விதை ஆந்திரப் பகுதியில் பயிரிடப்பட்டு, அமோக விளைச்சலை தந்தது உண்மைதான். ஆயினும் பின்னர் அந்த நிலம் பயிரிட முடியாத நிலமாய் மாறினதினால் நம் விவசாயிகள் அநேகர் தற்கொலை செய்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதே போல் நம் நாட்டின் தென் பகுதி நெற் களஞ்சியமாம் தஞ்சாவூர் பகுதியில் இதே கம்பெனியார் நெல் வயல்களை குத்தகைக்கு எடுத்து அவர்களது மரபணு மாற்றப்பட்ட நெல் விதைகளை சோதனை முறையில் விதைத்துள்ளனர். இதை எப்படியோ அறிந்து கொண்டு நமது மண்ணின் விவசாயிகள் கடும் எதிர்ப்பு காட்டி, அந்த நெற்பயிரை பிடுங்கி எறிந்து அழித்தனர். அந்தோ பரிதாபம், நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், அந்த மரபணு மாற்ற விதையின் பின்விளைவுகளை பற்றி யோசிக்காமல் இதை அனுமதித்துள்ளது.

இதிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆவிக்குரிய ஆலோசனை ஒன்று உள்ளது. தேவனுடைய நியமத்தை மாற்ற முடியாது, மாற்றக் கூடாது என்பதுதான். மாற்றி, விதைக்காமல் இருந்தாலும் அறுவடை உண்டு என்பதுதான் சாத்தானின் வேதப் பிரமாணத்திற்கு எதிரான ஆலோசனை. அறுவடை உண்டுதான் என்றாலும் முன்பாகவே நான் எழுதியிருந்தபடி, அது வாக்குத்தத்த அறுவடை அல்ல. வாக்குத்தத்தம் செயல்படாத சாத்தானின் பிரமாணத்தை நிறைவேற்ற “விதைப்பு” தேவையில்லைதான். அவன் அபரிமிதமாக ஆசீர்வாதத்தை, உலக செல்வாக்கை, செல்வத்தை செழிப்பை தருவான். உலக மக்கள் கொண்டிருக்கும் செல்வாக்கான வாழ்க்கையை தருவான். அவர்கள் தேவ இராஜ்ஜியத்திற்காக எதையும் விதைத்ததில்லைதான். ஆனால் அவர்கள் சாத்தானின் ஆளுகைக்குள்ளாக, அவனது அடிமைகளாக இருந்துதான் அதை பெறுகிறார்கள் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

மரபணு மாற்ற விதைகள் நல்ல விளைச்சலை தந்தது உண்மைதான். ஆனால் விதை தானியத்தை திரும்பப் பெறுவதற்காக அதன் உற்பத்தியாளர்களின் அடிமைகளாக இருந்துதான் விவசாயம் செய்ய முடியும். அதுமட்டுமல்லாமல் விளை நிலங்கள் புன்செய் (வளங்களை இழந்த நிலம்) நிலங்களாக மாற்றப்பட்டு போனது.

சத்துருவின் ஆலோசனைபடி செயல்பட்டால் நம் ஆவிக்குரிய ஜீவியம் வறண்ட பாலைவனமாகி விடும். பிறகு நித்திய ஜீவனுக்கேதுவான எதையுமே அதில் விளைய வைக்க முடியாத பெரிய ஆபத்து உருவாகி விடும். பண ஆசை சகல தீமைக்கும் வேராயிருக்கிறது. (1 தீமோ 6:10) சாத்தான் தரும் ஆசீர்வாதம் விதைப்பை சார்ந்து செயல்படாமல், பண ஆசையை சார்ந்து செயல்படுகிறது. சிந்தித்து செயல்படுவோமாக.

**தயவு செய்து இந்த புத்தகத்திற்கு ஓய்வு தராதீர்கள். விதையுங்கள். விதையுங்கள். விதையுங்கள். இளம் உள்ளங்களில்...**

## இனி...

## கடைசியாக...

**வேதம் முழுவதுமாக ஆக்கிரமித்துள்ள இந்த மகத்துவமான விதைகளை பற்றி ஒரு சுற்று தெரிந்து வைத்திருந்தால், இன்னும் இந்த சத்தியத்தை தொடர்ந்து தியானிக்க, அது எல்லோருக்கும் வசதியாக இருக்கும்.**

**தேவன் நமக்கு விதையை தருகிறார். ஆதி.1:11**

**விதைப்பது தேவனுடைய மனதின் விருப்பம், அதாவது சித்தம். ஆதி.1:12**

**தேவன் நமக்கு தரும் சம்பாத்தியத்தில் அது புதைந்து இருக்கிறது.ஆதி.1:29**

ஆதி-1:11 அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், **விதை**யைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் **விதை**யையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று.

ஆதி-1:12 பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே **விதை**யைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் **விதை**யையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார்.

ஆதி-1:29 பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் **விதை**தரும் சகலவிதப் பூண்டுகளையும், **விதை**தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது

ஆதி-8:22 பூமியுள்ள நாளளவும் **விதை**ப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.

ஆதி-26:12 ஈசாக்கு அந்தத் தேசத்தில் **விதை விதை**த்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்;

ஆதி-47:19 நாங்களும் எங்கள் நிலங்களும் உம்முடைய கண்களுக்கு முன்பாக அழிந்து போகலாமா? நீர் எங்களையும் எங்கள் நிலங்களையும் வாங்கிக்கொண்டு, ஆகாரம் கொடுக்கவேண்டும்; நாங்களும் எங்கள் நிலங்களும் பார்வோனுக்கு ஆதீனமாயிருப்போம்; நாங்கள் சாகாமல் உயிரோடிருக்கவும், நிலங்கள் பாழாய்ப்போகாமலிருக்கவும், எங்களுக்கு **விதை**த் தானியத்தைத் தாரும் என்றார்கள்.

ஆதி-47:23 பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற **விதை**த் தானியம், இதை நிலத்தில் **விதை**யுங்கள்.

ஆதி-47:24 விளைவில் ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்க வேண்டும்; மற்ற நாலுபங்கும் வயலுக்கு **விதை**யாகவும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களுடையதாயிருக்கட்டும் என்றான்.

யாத்-23:16 நீ வயலின் **விதை**த்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருஷமுடிவிலே நீ வயலின் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபோது, சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

யாத்-34:21 ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நாளிலே ஓய்ந்திருப்பாயாக; **விதை**ப்புக்காலத்திலும் அறுப்புக்காலத்திலும் ஓய்ந்திருப்பாயாக.

லேவி-11:37 மேற்சொல்லியவைகளின் உடலில் யாதொன்று **விதை**த்தானியத்தின்மேல் விழுந்தால் அது தீட்டுப்படாது;

லேவி-11:38 அந்த உடலில் யாதொன்று தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற **விதை**யின்மேல் விழுந்ததானால், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

லேவி-19:19 என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக; உன் மிருகஜீவன்களை வேறுஜாதியோடே பொலியவிடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான **விதை**களைக் கலந்து **விதை**யாயாக; சணல்நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக.

லேவி-25:3 ஆறுவருஷம் உன் வயலை **விதை**த்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்ப்பாயாக.

லேவி-25:4 ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்; அதில் உன் வயலை **விதை**க்காமலும், உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும்,

லேவி-25:11 அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்கு யூபிலி வருஷமாயிருப்பதாக; அதிலே **விதை**க்காமலும், தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும், கிளைகழிக்காமல் விடப்பட்ட திராட்சச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பீர்களாக.

லேவி-25:20 ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? நாங்கள் **விதை**க்காமலும், விளைந்ததைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே! என்று சொல்வீர்களானால்,

லேவி-25:22 நீங்கள் எட்டாம் வருஷத்திலே **விதை**த்து, ஒன்பதாம் வருஷம்மட்டும் பழைய பலனிலே சாப்பிடுவீர்கள்; அதின் பலன் விளையும்வரைக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்.

லேவி-26:5 திராட்சபழம் பறிக்குங் காலம் வரைக்கும் போரடிப்புக் காலம் இருக்கும்; **விதை**ப்புக் காலம்வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

லேவி-26:16 நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப் பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்; நீங்கள் **விதை**க்கும் **விதை** விருதாவாயிருக்கும்; உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள்.

லேவி-27:16 ஒருவன் தன் காணியாட்சியான வயலில் யாதொரு பங்கைக் கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டால், உன் மதிப்பு அதன் **விதை**ப்புக்குத்தக்கதாய் இருக்கவேண்டும்; ஒரு கலம் வாற்கோதுமை **விதை**க்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்படவேண்டும்.

எண்-6:4 தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி **விதை**முதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன்.

எண்-20:5 **விதை**ப்பும், அத்திமரமும், திராட்சச்செடியும், மாதளஞ்செடியும், குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்.

உபா-11:10 நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ **விதை**யை **விதை**த்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய்.

உபா-14:22 நீ உன் தேவனாகிய கர்த்தருக்கு எப்பொழுதும் பயந்திருக்கப் பழகும்படிக்கு, வருஷந்தோறும் நீ **விதை**க்கிற **விதை**ப்பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து,

உபா-21:4 உழுது **விதை**யாத தரிசான பள்ளத்தாக்கிலே அதைக் கொண்டுபோய், அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப்போடக்கடவர்கள்.

உபா-22:9 உன் திராட்சத்தோட்டத்திலே பற்பலவிதமான **விதை**யை **விதை**க்காயாக; இப்படிச் செய்தால் நீ **விதை**த்தவைகளின் பயிரையும், திராட்சத்தோட்டத்தின் பலனையும் தீட்டுப்படுத்துவாய்.

உபா-28:38 மிகுந்த **விதை**யை வயலுக்குக் கொண்டுபோவாய், கொஞ்சம் அறுப்பாய்; வெட்டுக்கிளி அதைப் பட்சித்துப்போடும்.

உபா-29:23 கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் சோதோமையும் கொமோராவையும் அத்மாவையும் செபோயீமையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் **விதை**ப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டதைக் காணும்போதும்,

நியா-6:3 இஸ்ரவேலர் **விதை** **விதை**த்திருக்கும் போது, மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து;

1இரா-18:32 அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலிபீடத்தைச் சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி **விதை** **விதை**க்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கி,

2இரா-19:29 உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ **விதை**த்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

யோபு-4:8 நான் கண்டிருக்கிறபடி, அநியாயத்தை உழுது, தீவினையை **விதை**த்தவர்கள், அதையே அறுக்கிறார்கள்.

யோபு-31:8 அப்பொழுது நான் **விதை**த்ததை வேறொருவன் புசிப்பானாக; என் பயிர்கள் வேரற்றுப்போகக்கடவது.

சங்-72:16 பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் **விதை**க்கப்பட்டிருக்கும்; அதின் விளைவு லீபனோனைப்போல அசையும்; பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்தோங்குவார்கள்.

சங்-97:11 நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் **விதை**க்கப்பட்டிருக்கிறது.

சங்-107:37 வயல்களை உண்டாக்கி **விதை**த்து, திராட்சத்தோட்டங்களை நாட்டுகிறார்கள், அவைகள் வரத்துள்ள பலனைத்தரும்.

சங்-126:5 கண்ணீரோடே **விதை**க்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்.

சங்-126:6 அள்ளித்தூவும் **விதை**யைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்.

நீதி-11:18 துன்மார்க்கன் விருதாவேலையைச் செய்கிறான்; நீதியை **விதை**க்கிறவனோ மெய்ப்பலனைப் பெறுவான்.

நீதி-22:8 அநியாயத்தை **விதை**க்கிறவன் வருத்தத்தை அறுப்பான்; அவன் உக்கிரத்தின் மிலாறு ஒழியும்.

பிர-11:4 காற்றைக் கவனிக்கிறவன் **விதை**க்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்.

பிர-11:6 காலையிலே உன் **விதை**யை **விதை**; மாலையிலே உன் கையை நெகிழவிடாதே; அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே.

ஏசா-5:10 பத்தேர் நிலமாகிய திராட்சத்தோட்டம் ஒரேபடி ரசம் தரும்; ஒரு கல **விதை** ஒரு குறுணி விளையும்.

ஏசா-17:11 பகற்காலத்திலே உன் நாற்றைவளரவும், விடியற்காலத்திலே உன் **விதை**யை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும் கடும்வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும்.

ஏசா-19:7 நதியோரத்திலும் நதிமுகத்திலும் இருக்கிற மடலுள்ள செடிகளும், நதியருகே **விதை**க்கப்பட்ட யாவும் உலர்ந்துபோம்; அது பறக்கடிக்கப்பட்டு இல்லாதேபோம்.

ஏசா-28:24 உழுகிறவன் **விதை**க்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன்நிலத்தைக் கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறது உண்டோ?

ஏசா-28:25 அவன் அதை மேலாக நிரவினபின்பு, அததற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் **விதை**க்கிறான் அல்லவோ?

ஏசா-30:23 அப்பொழுது நீ நிலத்தில் **விதை**க்கும் உன் **விதை**க்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார்; அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும்; அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும்;

ஏசா-32:20 மாடுகளையும் கழுதைகளையும் நடத்திக்கொண்டுபோய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் **விதை விதை**க்கிற நீங்கள் பாக்கியவான்கள்.

ஏசா-37:30 உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ **விதை**த்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

ஏசா-55:10 மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச்செய்து, **விதை**க்கிறவனுக்கு **விதை**யையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

ஏசா-61:11 பூமி தன் பூண்டுகளை விளைவிப்பதுபோலவும், தோட்டம் தன்னில் **விதை**க்கப்பட்டவைகளை முளைவிப்பதுபோலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.

எரே-2:2 நீ போய், எருசலேமின் செவிகள் கேட்கும்படிக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: **விதை**க்கப்படாத தேசமாகிய வனாந்தரத்திலே நீ என்னைப் பின்பற்றிவந்த உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே-4:3 யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே **விதை**யாதிருங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்.

எரே-12:13 கோதுமையை **விதை**த்தார்கள், முள்ளுகளை அறுப்பார்கள்; பிரயாசப்படுவார்கள் பிரயோஜனமடையார்கள்; கர்த்தருடைய உக்கிரகோபத்தினால் உங்களுக்கு வரும் பலனைக்குறித்து வெட்கப்படுங்கள்.

எரே-31:27 இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷவித்தினாலும், மிருகவித்தினாலும் **விதை**ப்பேன்.

எரே-35:7 நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், **விதை**யை **விதை**யாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லாநாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக் கட்டளையிட்டார்.

எரே-35:9 நாங்கள் குடியிருக்க வீடுகளைக்கட்டாமலும், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாபின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்; எங்களுக்குத் திராட்சத்தோட்டமும் வயலும் **விதை**ப்பாடுமில்லை.

எரே-50:16 **விதைவிதை**க்கிறவனையும் அறுப்புக்காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவனையும் பாபிலோனில் இராதபடிச் சங்காரம்பண்ணுங்கள்; கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குத் திரும்பிக்கொண்டு, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

எசே-17:5 தேசத்தின் **விதை**யில் ஒன்றை எடுத்து, அதைப் பயிர்நிலத்திலேபோட்டு, அதை எடுத்து, மிகுந்த தண்ணீர் ஓரத்திலே பத்திரமாய் நட்டது.

எசே-36:9 இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன்; நீங்கள் பண்படுத்தப்பட்டு **விதை**க்கப்படுவீர்கள்.

ஓசி-2:23 நான் அவளை எனக்கென்று பூமியிலே **விதை**த்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார்.

ஓசி-8:7 அவர்கள் காற்றை **விதை**த்து, சூறைக்காற்றை அறுப்பார்கள்; விளைச்சல் அவர்களுக்கு இல்லை; கதிர் மாவைக் கொடுக்கமாட்டாது; கொடுத்தாலும் அந்நியர் அதை விழுங்குவார்கள்.

ஓசி-10:12 நீங்கள் நீதிக்கென்று **விதை விதை**யுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்புஅறுங்கள்; உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.

யோவே-1:17 **விதை**யானது மண்கட்டிகளின்கீழ் மக்கிப்போயிற்று; பயிர் தீய்ந்து போகிறதினால் பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்துபோயின.

ஆமோ-9:13 இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும், திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் **விதை**க்கிறவனையும் தொடர்ந்துபிடித்து, பர்வதங்கள் திராட்சரசமாய் வடிகிறதும், மேடுகளெல்லாம் கரைகிறதுமான நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மீகா-6:15 நீ **விதை**த்தும் அறுக்காமற் போவாய்; நீ ஒலிவப்பழங்களையும் திராட்சப்பழங்களையும் ஆலையாடினபோதிலும், எண்ணெய் பூசிக்கொள்வதுமில்லை, இரசம் குடிப்பதுமில்லை.

ஆகா-1:6 நீங்கள் திரளாய் **விதை**த்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள்; நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை; குடித்தும் பரிபூரணமடையவில்லை; நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை; கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதைச் சம்பாதிக்கிறான்.

ஆகா-2:19 களஞ்சியத்தில் இன்னும் **விதை**த்தானியம் உண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரமும் கனிகொடுக்கவில்லையே; நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார் என்றான்.

சக-8:12 **விதை**ப்புச் சமாதானமுள்ளதாயிருக்கும்; திராட்சச்செடி தன் கனியைத் தரும்; பூமி தன் பலனைத் தரும்; வானம் தன் பனியைத் தரும்; இந்த ஜனத்தில் மீதியானவர்கள் இதையெல்லாம் சுதந்தரிக்கக் கட்டளையிடுவேன்.

மத்-6:26 ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?

மத்-13:3 அவர் அநேக விசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்: கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மத்-13:4 அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மத்-13:5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்தது; மண் ஆழமாயிராததினாலே அது சீக்கிரமாய் முளைத்தது.

மத்-13:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டது.

மத்-13:8 சில விதையோ நல்ல நிலத்தில் விழுந்து, சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

மத்-13:18 ஆகையால் விதைக்கிறவனைப் பற்றிய உவமையைக் கேளுங்கள்.

மத்-13:19 ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணரா திருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.

மத்-13:20 கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவன்;

மத்-13:22 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான்.

மத்-13:23 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ, வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன் தருவான் என்றார்.

மத்-13:24 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.

மத்-13:25 மனுஷர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்து விட்டுப் போனான்.

மத்-13:27 வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து: ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள்.

மத்-13:31 வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.

மத்-13:32 அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.

மத்-13:37 அவர் பிரதியுத்தரமாக: நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷகுமாரன்;

மத்-13:38 நிலம் உலகம்; நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்;

மத்-13:39 அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு; அறுப்பு உலகத்தின் முடிவு; அறுக்கிறவர்கள் தேவதூதர்கள்.

மத்-25:24 ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன்.

மத்-25:26 அவனுடைய எஜமான் பிரதியுத்தரமாக: பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவ னென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே.

மாற்-4:3 கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்.

மாற்-4:4 அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

மாற்-4:5 சில விதை அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது;

மாற்-4:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப்போட்டது.

மாற்-4:8 சில விதை நல்ல நிலத்தில் விழுந்து, ஓங்கிவளருகிற பயிராகி, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தது.

மாற்-4:14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.

மாற்-4:15 வசனத்தைக் கேட்டவுடனே சாத்தான் வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப் போடுகிறான்; இவர்களே வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்கள்.

மாற்-4:17 தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடை கிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.

மாற்-4:19 இவர்களே முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்.

மாற்-4:20 வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்.

மாற்-4:26 பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து;

மாற்-4:27 இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்குத் தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.

மாற்-4:31 அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கிறது; அது பூமியில் விதைக்கப்படும்போது பூமியிலுள்ள சகல விதைகளிலும் சிறிதாயிருக்கிறது;

மாற்-4:32 விதைக்கப்பட்டபின்போ, அது வளர்ந்து, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதினுடைய நிழலின்கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடும் என்றார்.

லூக்-8:5 விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்துமிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது.

லூக்-8:6 சில விதை கற்பாறையின்மேல் விழுந்தது; அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினால் உலர்ந்துபோயிற்று.

லூக்-8:7 சில விதை முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டது.

லூக்-8:8 சில விதை நல்ல நிலத்தில் விழுந்தது, அது முளைத்து, ஒன்று நூறாகப் பலன் கொடுத்தது என்றார். இவைகளைச் சொல்லி, கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று சத்தமிட்டுக் கூறினார்.

லூக்-8:11 அந்த உவமையின் கருத்தாவது விதை தேவனுடைய வசனம்

லூக்-8:12 வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்.

லூக்-8:13 கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக் காலமாத்திரம் விசுவாசித்து, சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்.

லூக்-8:14 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள்.

லூக்-8:15 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

லூக்-12:24 காகங்களைக் கவனித்துப்பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப்பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.

லூக்-19:21 நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான்.

லூக்-19:22 அதற்கு அவன்: பொல்லாத ஊழியக்காரனே, உன் வாய்ச்சொல்லைக்கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன். நான் வைக்காததை எடுக்கிறவனும், விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்தாயே,

யோவா-4:36 விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

யோவா-4:37 விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்சொல் இதினாலே விளங்குகிறது.

1கொரி-9:11 நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?

1கொரி-15:36 புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே.

1கொரி-15:37 நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்.

1கொரி-15:38 அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.

1கொரி-15:42 மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்;

1கொரி-15:43 கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்.

1கொரி-15:44 ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு.

2கொரி-9:6 பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

2கொரி-9:10 விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச்செய்வார்.

கலா-6:7 மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

கலா-6:8 தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்.

யாக்-3:18 நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

**- நன்றி -**

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் தயங்காமல் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள். இந்த கம்ப்யூட்டர் பிரதி விரைவில் அச்சு வடிவில் வெளிவர ஜெபியுங்கள்.**

**Ph.: +91-461-2377889 / Mobile: 0-94424 66250 & 0-9003456506**

**Email: sovereignjesus@hotmail.com / sovereignjesus@gmail.com**